بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُهٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِهِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِهِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰهُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّةٌ

# பதர்

**வார இதழ் - காதியான்**

**Weekly BADAR Qadian Tamil**

தொகுதி 11

இதழ் 39

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1448 - ரபீயுஸ் ஸானீ 24

ஹிஜ்ரீ ஷம்ஸி 1405 - தபூக் 24 ★ 24 செப்டம்பர் 2026


## அல்லாஹ்வின் கட்டளை

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَجِيبُوا لِلَّهِ وَلِلرَّسُولِ إِذَا دَعَاكُمْ لِمَا يُحْيِيكُمْ ۖ وَاعْلَمُوا أَنَّ اللَّهَ يَحُولُ بَيْنَ الْمَرْءِ وَقَلْبِهِ وَأَنَّهُ إِلَيْهِ تُحْشَرُونَ

நம்பிக்கை கொண்டவர்களே! அவர் (அல்லாஹ்வின் தூதர்) உங்களுக்கு உயிர் கொடுப்பதற்காக அழைத்தால் நீங்கள், அல்லாஹ்வுக்கும், தூதருக்கும் பதில் அளியுங்கள். அல்லாஹ் மனிதனுக்கும், அவனது உள்ளத்திற்குமிடையில் சூழ்ந்திருக்கின்றான் என்பதையும் நீங்கள் (உயிர்ப்பிக்கப்பட்டு) அவனிடமே திரும்பவும் கொண்டு செல்லப்படுவீர்கள் என்பதனையும் தெரிந்து கொள்ளுங்கள். (அல் அன்ஃபால்: 25)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**நபிமொழி**

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் குரல் அசல் வாழ்வாகும்

ஹஸ்ரத் அபூ ஸயீத் பின் முஃலா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'நான் தொழுது கொண்டிருந்தபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் என்னை அழைத்தார்கள். நான் அன்னாரின் சமூகத்தில் ஆஜராகவில்லை. நான் தொழுது முடித்த பிறகு ஆஜரானேன். 'நீர் வருவதற்கு ஏன் தாமதமானது?' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வினவினார்கள். மேலும்,

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَجِيبُوا لِلَّهِ وَلِلرَّسُولِ إِذَا دَعَاكُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் உங்களை அழைக்கும்போது அவர்களுக்குப் பதிலளியுங்கள்' என்று அல்லாஹ் உமக்கு கட்டளையிடவில்லையா?' என்று அன்னார் (ஸல்) கேட்டார்கள்.

பின்னர், 'நான் பள்ளிவாலிலிருந்து வெளியேறுவதற்கு முன், உமக்கு திருக்குர்ஆனின் மிகவும் மகத்தான சூராவை உனக்குக் கற்றுத் தருவேன்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். சிறிது நேரத்திற்குப் பிறகு அன்னார் (ஸல்) வெளியேற முற்பட்டபோது, நான் அன்னாருக்கு நினைவூட்டினேன்.

மேலும், முஆஸ் பின் முஆஸ் அன்பரீ இந்த ஹதீஸை அறிவிக்கின்றார்கள்: எங்களிடம் ஷுஅபஃ எடுத்துரைத்தார். அன்னாரிடம் குபைப் அவர்களும், அன்னார் ஹிஃப்ழ் அவர்களிடமிருந்தும் இதனை செவியுற்றார்கள். மேலும் அன்னார் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் ஸஹாபியான அபூ ஸயீத் பின் முஃலா (ரலி) அவர்களிடமிருந்து செவியுற்றார்கள். அன்னார் (ரலி) கூறினார்கள்: 'அது சூரா ஃபாத்திஹா அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன் ஆகும். அதில் ஏழு வசனங்கள் உள்ளன. அவை ஒவ்வொரு தொழுகையிலும் மீண்டும், மீண்டும் ஓதப்படுகின்றன."

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا اسْتَجِيبُوا لِلَّهِ وَلِلرَّسُولِ إِذَا دَعَاكُمْ

என்பதன் விளக்கம்: இதில் லிமா யுஹ்யீக்கும்' என்பதற்கு, 'உங்களை சீர்படுத்தும் அந்த விஷயங்களின் பக்கம் என்பது பொருளாகும்'. இஹ்யா என்பதன் பொருள் சீர்திருத்தம் என்பதாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றை ஏற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில், எந்த விஷயங்களால் உங்களிடம் சீர்திருத்தம் ஏற்படுமோ அதன் பக்கமே அவர்கள் வழிநடத்துகின்றனர். (ஸஹீஹுல் புஹாரி, ஹதீஸ் எண்: 4647)

* * * * * * * * * * *

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்**

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மகத்தான அற்புதங்கள்

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

மேலும், அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மற்றோர் அற்புதம், சந்திரனைப் பிளத்தல் என்பதும் இதே இறை ஆற்றலால் வெளிப்பட்டதாகும். எந்த துஆவும் அத்துடன் இணைந்திருக்கவில்லை; ஏனெனில் அது இறை ஆற்றலால் நிறைந்திருந்த வெறும் விரலின் சைகையால் நிகழ்ந்திருந்தது, மேலும் இதே வகையான இன்னும் ஏராளமான அற்புதங்கள் உள்ளன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வழக்கத்திற்கு மாற்றமான அற்புதங்களைக் காட்டினார்கள். அவற்றுடன் துஆ ஏதும் இருக்கவில்லை. பலமுறை, வெறும் ஒரு கிண்ணத்தில் இருந்த சிறிதளவு தண்ணீரினுள் தமது விரல்களை நுழைத்து அதிகப்படுத்தி விட்டார்கள் என்றால், முழுப் படைப் பரிவாரங்களும்,ஒட்டகங்களும், குதிரைகளும் அந்தத் தண்ணீரைக் குடித்தன. அதன் பின்னரும் அந்தத் தண்ணீர் அப்படியே தனது அளவில் இருந்தது. மேலும், பலமுறை இரண்டு, நான்கு ரொட்டிகளின் மீது கரத்தை வைத்ததால் பசியுடனும், தாகத்துடனும் இருந்த ஆயிரக்கணக்கானோர் வயிறார உண்டனர். சிலநேரங்களில், சிறிதளவு பாலைத் தமது உதடுகளால் தொட்டு பரக்கத் செய்து, ஒரு கூட்டத்தின் வயிற்றை அதனைக் கொண்டு நிரப்பினார்கள். மேலும், சில நேரங்களில் உப்பு நீர்க் கிணற்றில் தமது வாயின் உமிழ்நீரைப் போட்டு

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

**தஃப்ஸீரே கபீர்**

## இஹ்யாவுல் மவ்தா' என்பதன் பொருள் இறந்தவர்களைப் போல் இருப்பவர்களுக்கு வாழ்வளிப்பது

كَذٰلِكَ يُحۡيِ اللّٰهُ الۡمَوۡتٰى میں اِحیاءِ مَوتٰى

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்தின் விளக்கவுரையில் கூறுகின்றார்கள்:

' كَذٰلِكَ يُحۡيِ اللّٰهُ الۡمَوۡتٰى میں اِحیاءِ مَوتٰى

என்பதற்கு இரண்டு பொருள்கள் உள்ளன. முதலாவது பொருள், இவ்வாறு அல்லாஹ் இறந்தவர்களை உயிர்ப்பிக்கிறான். அதாவது உண்மையாகவே இறந்தவர்களை உயிர்ப்பித்து இந்த உலகத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறான். இந்தப் பொருள் இந்த இடத்தில் பொருந்தாது; ஏனெனில் திருக்குர்ஆனின் பிற வசனங்கள் இதற்கு எதிராக உள்ளன. உண்மையாகவே இறந்தவர்கள் இந்த உலகிற்குத் திரும்பி வர முடியாது என்று அவற்றிலிருந்து நிரூபணமாகிறது.

எனவே, இந்த வசனத்திற்கு மற்றொரு பொருளை கொடுக்க முடியும். அதாவது, மரணித்தவர்களைப் போல் இருப்பவர்களுக்கு வாழ்வளிப்பது. இந்தப் பொருள் வழக்கமான பேச்சுமுறைக்கு ஏற்புடையதாகும். சில நேரங்களில் ஒரு பொருள் மற்றொரு பொருளுடன் எத்தகைய ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றது என்றால், அதற்கு அதே பெயர் கிடைத்து விடுகிறது.

உதாரணமாக, சாதாரண சொல் வழக்கில் ஒருவருக்குக் கடுமையான காயம் ஏற்பட்டால், அவர் தீவிர வேதனையையும் துயரத்தையும் வெளிப்படுத்தியவாறு 'ஐயோ நான் மரணித்து விட்டேன்' என்று கூறுகின்றார். அதற்கு 'நான் இறந்தவரைப் போல் ஆகிவிட்டேன்' என்பது பொருளாகும். எனவே, இந்த வசனத்தின் பொருளாக இவ்வாறு அமையும்: அதாவது, எவர்கள் இறந்தவர்களைப் போல் இருக்கின்றார்களோ அவர்களை அல்லாஹ் உயிர்ப்பிக்கிறான்.அதாவது, எவர் உயிர் பிழைப்பதற்கு எந்த நம்பிக்கையும் எஞ்சியிருக்கவில்லையோ, உலக அறிவுகள் எவரது அழிவுக்குத் தீர்ப்பு வழங்கிவிட்டனவோ, அவர்களை அல்லாஹ் தன் அருளால் காப்பாற்றி விடுகிறான்.'

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 2, பக்கம் 188)

* * * * * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் மரணித்தவர்களை உயிர்ப்பிக்கின்ற மகத்தான அடையாளமும்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள், அல்லாஹ் தஆலா எவரை வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தியின் பதவியில் அமர்த்தினானோ, அன்னார் (அலை) தாம் மஸீஹைப் போன்றவர் என்று வாதம் புரிந்தார்கள். மேலும் திருக்குர்ஆன் மற்றும் இன்ஜீலில் மஸீஹைப் பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது:

அதாவது, அவர் அல்லாஹ்வின் அனுமதியுடன் இறந்தவர்களை உயிர்ப்பித்து வந்தார்; நோயாளிகளைக் குணப்படுத்தினார்; பார்வையற்றோருக்குப் பார்வையை வழங்கினார். இதன் பொருள் ஆன்மீக ரீதியாக இறந்தவர்களுக்கு ஆன்மீக வாழ்வளிந்து வந்தார். அவர் ஆன்மீக நோய்களை குணப்படுத்தி வந்தார்; ஆன்மீகக் குருடர்களுக்குப் பார்வை வழங்கி வந்தார் ஆகும் என்ற போதிலும் அல்லாஹ் தனது அருளால் மஸீஹ் (அலை) அவர்களுக்கும் மற்றும் ஏனைய நபிமார்களுக்கும். குறிப்பாக நமது நபிகள் நாயகம் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கும் எத்தகைய ஆற்றலை வழங்கினான் என்றால், பௌதீக ரீதியிலும் மரணிக்கும் நிலைக்குச் சென்றவர்களையும், உலகியல் மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோயாளிகளையும் அந்நிலையிலிருந்து மீட்டெடுத்தனர் அவர்கள் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இத்தகைய மகத்துவ மிக்க அற்புதங்கள் இன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாகவும் வெளிப்பட்டுள்ளன. இந்த அற்புதங்களைக் கண்டு, அந்த முந்தைய நபிமார்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹின் அடையாளங்கள் மீதும் முழுமையான நம்பிக்கை உருவாகிறது; இல்லையெனில் இன்றைய இந்தக் காலகட்டத்தில் அவை வெறும் செவி வழிக் கதைகளாக மட்டுமே இருந்திருக்கும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அத்தகைய நூற்றுக்கணக்கான அற்புதங்களில் இருந்து ஒரேயோர் அற்புதம் மட்டும் கீழே குறிப்பிடப்படுகிறது:

1906-ஆம் ஆண்டு நிகழ்ந்த சம்பவமாகும்: காதியானில் அப்துல் கரீம் என்ற ஒரு மாணவர் படிக்க வந்தார். அவர் மதரஸா அஹ்மதிய்யா காதியானின் நான்காம் ஆண்டில் படித்து வந்தார். அவருக்கு நடந்த சம்பவத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய வார்த்தைகளிலேயே படியுங்கள்!

'அப்துர் ரஹ்மான் என்பவரின் மகன் அப்தூல் கரீம் என்ற மாணவர், ஹைதராபாத் தெற்குப் பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். அவர் நமது மதரஸாவின் ஒரு மாணவர் ஆவார். இறை நியதியின்படி அவரை வெறிநாய் கடித்துவிட்டது. நாங்கள் அவரைச் சிகிச்சைக்காக கஸோலிக்கு அனுப்பி விட்டோம். சில நாட்கள் அவருக்கு கஸோலியில் சிகிச்சை நடந்து வந்தது. பின்னர் அவர் காதியான் திரும்பி வந்தார். ஆனால், சில நாட்கள் கழிந்த பிறகு, மீண்டும் அவரிடம் வெறி நாய் கடித்ததற்கு பிறகு வெளிப்படும் பித்து பிடித்தலின் அறிகுறிகள் வெளிப்படத் தொடங்கின. அவர் தண்ணீரைக் கண்டு பயப்படத் துவங்கினார். மேலும், அபாயகரமான நிலை உருவாகி விட்டது. அப்போது அந்த ஏழை மற்றும் வெளியூர் மாணவருக்காக எனது உள்ளம் மிகவும் நிம்மதியிழந்தது. மேலும், அவருக்காக துஆ செய்வதற்கு ஒரு சிறப்பு கவனம் உருவாகி விட்டது. அனைவரும் அவர் சில மணிநேரங்களில் இறந்துவிடுவார் என்று கருதினார்கள். வேறு வழியின்றி அவர் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டு,ஒரு தனியான இடத்தில் மற்றவர்களிடமிருந்து விலக்கி வைக்கப்பட்டார். கஸோலியில் உள்ள ஆங்கில மருத்துவர்களுக்குத் தந்தி அனுப்பப்பட்டு, இந்த நிலையில் அவருக்கு ஏதேனும் சிகிச்சை உள்ளதா? என்று கேட்கப்பட்டது. 'இப்போது அவருக்கு எந்தச் சிகிச்சையும் இல்லை' என்று அங்கிருந்து தந்தி மூலம் பதில் வந்தது.

ஆனால், அந்த ஏழை மற்றும் ஆதரவற்ற சிறுவருக்காக என் உள்ளத்தில் மிகவும் இரக்கம் ஏற்பட்டது. என் நண்பர்களும் அவருக்காக துஆ செய்யுமாறு மிகவும் வற்புறுத்தினர். ஏனெனில், அவர் மிகவும் பரிதாபத்திற்குரிய நிலையில் இருந்தார். மேலும்,அவர் மரணித்து விட்டால் பின்னர் மோசமான வடிவில் எதிரிகள் எள்ளி நகையாடுவார்கள் என்ற அச்சம் உள்ளத்தில் உருவானது. எனவே எனது உள்ளம் அவருக்காகக் கடுமையான துயரத்திலும், நிம்மதியின்மையிலும் மூழ்கியது. மேலும், சுய கட்டுப்பாட்டைத் தாண்டி உருவாகின்ற அசாதாரண சிறப்பு கவனம் உருவானது. இன்னும் கூறப்போனால், இத்தகைய கவனம் முற்றிலும் அல்லாஹ் தஆலாவின் புறமிருந்து உண்டாகிறது. இத்தகைய நிலை உருவாகிவிட்டால், பின்னர் அல்லாஹ் தஆலாவின் கட்டளையால் அது தாக்கத்தை வெளிப்படுத்துகிறது. அதன் மூலம் இறந்தவர் உயிர்பெற்று விடுவது சமீபமாக இருக்கின்றது.

சுருக்கமாக, அல்லாஹ்வின் பக்கம் முன்னேறு நிலை கிடைத்து விட்டது. அந்த கவனம் முழு உச்சத்தை அடைந்து விட்டபோது, வேதனை என் உள்ளத்தை முழுமையாக ஆட்கொண்டு விட்டபோது, உண்மையிலேயே மரணித்திருந்த அந்த நோயாளியிடம் இந்தச் சிறப்பு கவனத்தின் விளைவுகள் வெளிப்படத் துவங்கி விட்டன. அவர் தண்ணீரக் கண்டு அஞ்சிக் கொண்டிருந்தார்; மேலும், வெளிச்சத்தைக் கண்டு ஓடிக் கொண்டிருந்தார். இந்த நிலையிலிருந்து திடீரென அவரது உடல்நலம் தேறத் தொடங்கியது. 'இப்போது எனக்கு நீரைக் கண்டு பயமில்லை' என்று அவர் கூறினார். அப்போது, அவருக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டது. அவர் எந்தப் பயமும் இன்றி அதைக் குடித்தார். உளூச் செய்து தொழுவும் செய்தார். இரவு முழுவதும் தூங்கினார். அவரது பயமும், வெறித்தனமும் நீங்கியது. சில நாட்களிலேயே அவர் முற்றிலும் குணமடைந்தார். அவரிடம் இந்த பைத்தியத்தின் நிலை உருவாகியிருந்தது; இந்த வெறிநோயின் நிலையானது அவரை அழிப்பதற்காக வரவில்லை; மாறாக, இது இறைவனின் ஓர் அற்புதத்தைக் காட்டுவதற்காகவே வந்தது என்று எனது உள்ளத்தில் உடனடியாக போடப்பட்டது; ஒருவரை வெறிநாய் கடித்து, மேலும் வெறிநோயின் அறிகுறிகள் வெளிப்பட்டு விட்ட நிலையில், பின்னர் ஒரு நபர் அந்த நிலையிலிருந்து பிழைக்க முடியும் என்பது உலகில் ஒருபோதும் பார்க்கப்படவில்லை என்று அனுபவம் வாய்ந்த மக்கள் கூறுகின்றனர்.(ததிம்மா ஹக்கீகத்துல் வஹீ, பக்கம் 47-46)

இன்று ரேபிஸ் (Rabies) நோய்க்கான தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு 125 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது, அதன் கண்டுபிடிப்பாளரான லூயிஸ் பாஸ்டர் (Louis Pasteur) என்பவரின் இந்த ஆராய்ச்சி ஒவ்வொரு ஆண்டும் வெற்றிகரமான கட்டங்களைக் கடந்து கொண்டிருக்கிறது. வெறிநாய் கடித்த பிறகு இந்தத் தடுப்பூசி நேர்மறையான தாக்கத்தை வெளிப்படுத்தி வருகிறது,மேலும் நோயாளியின் உயிர் காப்பாற்றப்படுகிறது என்று கூறப்படுகிறது. ஆனால், ஒரு நோயாளியிடம் வெறிநோயின் பித்துப் பிடித்தலின் தாக்கம் ஏற்பட்டுவிட்டால், அவர் மீது இந்த தடுப்பூசி வேலை செய்யும் வகையில் இதுவரை எந்த சிகிச்சையும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால், ஸய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக இறைவன் இந்த அற்புதத்தைக் காட்டினான். அதாவது ஒரு நபரை வெறிநாய் கடித்து விடுகின்றது. அதனால் அவருக்கு பித்து பிடித்த நிலை ஏற்பட்டு விடுகிறது. மேலும், அனைத்து அறிகுறிகளும் வெளிப்பட்டு விடுகின்றன. மேலும் 'Sorry Nothing Can be done for Abdul Kareem' என்று மருத்துவர்கள் எழுத்துப்பூர்வமாகப் பதிலளித்து விடுகின்றனர்.

இவ்வாறு இருந்தபோதிலும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் துஆக்களால் அல்லாஹ் இந்த அற்புதத்தை வெளிப்படுத்தினான்: அதாவது, அல்லாஹ் ஹஸ்ரத் அப்துல் கரீம் சாஹிபுக்கு முழு குணத்தை வழங்கினான். மருத்துவ அறிவியலில் இது எத்தகைய ஒரு வியக்கத்தக்க நிகழ்வு என்றால், இதற்கான உதாரணம் இன்று வரை உலகில் கிடைக்கவில்லை. மேலும், நிச்சயமாக இது ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கான உயிருள்ள மற்றும் வாழும் அடையாளமாகும்.

அப்துல் கரீம் சாஹிப் அவர்களுக்கு இந்த சம்பவம் 1907-இல் நடந்தது. அதற்குப் பிறகு 1939-இல் அன்னார் மரணமடைந்தார்கள். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் துஆ ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த அற்புதத்திற்குப் பிறகு, அன்னார் முப்பத்திரண்டு ஆண்டுகள் உயிருடன் இருந்தார்கள்; மேலும், ஆரோக்கியமான வாழ்க்கையைக் கழித்தார்கள். அன்னார் யாத்கீர், கர்நாடகாவைச் சேர்ந்தவராக இருந்தார்கள். காதியானிலிருந்து திரும்பிச் சென்ற பிறகும், அல்லாஹ்வின் அருளால் யாத்கீரிலும் மற்ற பகுதிகளிலும் ஜமாஅத்திற்கு தொண்டுகளையும் ஆற்றியுள்ளார்கள். யாத்கீரில் அன்னார் வெள்ளிக்கிழமை குத்பா வழங்கி வந்தார்கள். அன்னாருடைய பேரன்களான மரியாதைக்குரிய ஸூபைர் அஹ்மத் சாஹிப் மற்றும் காலித் அஹ்மத் சாஹிப் ஆகியோரும் தற்போதும் யாத்கீரில் உயிருடன் இருக்கின்றனர். மேலும், சுறுசுறுப்பான வாழ்க்கையைக் கழித்து வருகிறார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

காதியான் தாருல்-அமானிலும் அல்லாஹ்வின் அருளால் அன்னாருடைய சந்ததிகளைச் சேர்ந்த சிலர் வசித்து வருகின்றனர். சுப்ஹானல்லாஹ்! இது எத்தகைய அடையாளமாகும்! இறந்தவர்களை உயிர்ப்பிப்பதற்கான எத்தகைய மகத்தான அற்புதமாகும் இது!

ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மூலமாக அல்லாஹ் இப்படிப்பட்ட பல டஜன் அடையாளங்களை வெளிப்படுத்தியுள்ளான்.

எனவே, ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாகவும் இதுபோன்ற 'இஹ்யாயே மவ்தா' (இறந்தவர்களுக்கு ஒப்பான நிலையை எட்டிய நபர்களை உயிர்ப்பித்தல்) எனும் அற்புதமே நிரூபணமாகியுள்ளதே தவிர, அன்னார் (அலை) உண்மையிலேயே இறந்தவர்களை மீண்டும்

இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம்....

# ஜுமுஆ பேருரை

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தன்னிகரற்ற நன்றியுணர்வு

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 07 ஆகஸ்ட் 2026** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1405 ஆண்டு **ஸஹூர் மாதம் 07 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝ اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வின் தரம் மற்றும் அன்னாரின் அமல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் பற்றியக் குறிப்பை ஜல்ஸாவிற்கு முந்தைய குத்பாவில் நான் எடுத்துரைத்திருந்தேன். அந்த வரிசையில் இன்றைக்கும் எடுத்துரைப்பேன். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறு,சிறு விஷயங்களுக்கும் நன்றி செலுத்தும்படி வழிகாட்டினார்கள்.

அதன்படி ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: தன் அடியான் ஒரு கவளம் உணவை உண்ணும்போது அதற்காக தன்னைப் புகழும்போது அல்லது ஒரு மடக்கு நீரைக் குடிக்கும்போது, அதற்காகத் தன்னைப் புகழும்போது அதனைக் கண்டு அல்லாஹ் மிகவும் மகிழ்ச்சியடைகிறான்.'

(ஸஹீஹ் முஸ்லிம் - திக்ரு, துஆ, தவ்பா மற்றும் இஸ்திஃக்ஃபார் அத்தியாயம், அல்லாஹ்வைப் புகழ்வதன் சிறப்புகள் என்னும் பாடம்... ஹதீஸ் எண்: 4901 (89), தொகுதி 14, பக்கம் 107, நூர் ஃபவுண்டேஷன்)

அதேபோன்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருநாள் வீட்டிற்குள் நுழைந்தபோது, ரொட்டித் துண்டு ஒன்று (நிலத்தில்) கிடப்பதைக் கண்டார்கள். அன்னார் (ஸல்) அந்த ரொட்டித் துண்டை எடுத்து, அதைச் சுத்தம் செய்து சாப்பிட்டார்கள்; மேலும், கூறினார்கள்:

'ஆயிஷாவே! கண்ணியமிக்கப் பொருளைக் கண்ணியப்படுத்துவீராக! இந்த உணவு எனும் அருட்கொடை ஒரு சமுதாயத்திடமிருந்து விலகிவிட்டால், பின்னர் அது மீண்டும் திரும்பி வருவதில்லை' என்று கூறினார்கள். (ஸுனன் இப்னு மாஜா, கிதாபுல் இத்இமா, பாபுன்-நஹி அனில் காஅல்-அத்தஆம், ஹதீஸ்: 3353)

எனவே இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயலாக இருந்தது. அடுத்து, வெளிப்படையாகச் சிறியதாகத் தோன்றும் விஷயத்திற்காகவும் அன்னார் (ஸல்) சுயமே அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள். அவனது அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தி வந்தார்கள். தம் குடும்பத்தினருக்கும் அதையே அறிவுறுத்தி வந்தார்கள்.

**நாம் நமது வாழ்வாதாரத்தில் பரக்கத்தை விரும்பினால், பின்னர் அல்லாஹு தஆலாவின் ஒவ்வொரு அருட்கொடைக்கும் நன்றி செலுத்துவது அவசியமாகும்.**

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

மக்கா வெற்றியின் நாளில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தமது சிறிய தந்தையின் மகளான உம்மு ஹானீ பின்த் அபீ தாலிப் (ரலி) அவர்களின் வீட்டிற்கு வருகை தந்தார்கள். அந்த நேரத்தில் அன்னாருக்குப் பசி ஏற்பட்டிருந்தது. அன்னார் (ஸல்) கூறினார்கள்:

'உம்மிடம் சாப்பிடுவதற்கு ஏதேனும் உணவு இருக்கிறதா?'. அதற்கு, அன்னார் (உம்மு ஹானீ), 'காய்ந்த ரொட்டித் துண்டுகளைத் தவிர வேறொன்றும் என் வசமில்லை; அதை தங்களின் சமூகத்தில் சமர்ப்பிக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது' என்று கூறினார்கள். அதற்கு, 'அவற்றையே கொண்டு வாருங்கள்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவற்றை தண்ணீரில் போட்டுத் துண்டு துண்டாக ஆக்கினார்கள். அன்னார் (ரலி) உப்பை எடுத்துக் கொண்டு வந்தார்கள். குழம்பு ஏதேனும் இருக்கிறதா?' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! சிறிதளவு வினிகரைத் தவிர வேறொன்றும் இல்லை' என்று அன்னார் (ரலி) கூறினார்கள். அப்போது, 'அதையே கொண்டு வாருங்கள்' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பின்னர், அன்னார் (ஸல்) அதைத் தமது உணவில் ஊற்றி, அதிலிருந்து சாப்பிட்டு, அல்லாஹு தஆலாவைப் புகழ்ந்தார்கள். பின்னர், 'வினிகர் எவ்வளவு சிறந்த குழம்பாகும்! உம்மு ஹானியே! வினிகர் இருக்கும் வீடு ஏழ்மையானது அல்ல' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள். (அல்-முஃஜமுஸ் ஸகீர் லித் தப்ரானி, மொழிபெயர்ப்பு பக்கம் 615 முதல் 616, ஹதீஸ் 951)

எனவே இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நன்றி உணர்வின் தரமாக இருந்தது. நாம் இந்த நாடுகளில வாழ்கிறோம். எண்ணற்ற அருட்கொடைகளிலிருந்து நாம் பலன் பெறுகிறோம். அவ்வாறிருந்தும், அல்லாஹு தஆலாவுக்குச் செலுத்த வேண்டிய நன்றிக்கான உரிமையை நாம் செலுத்துவதில்லை.

இன்னும் கூறப்போனால், சிலமுறை சின்னச் சின்ன விஷயங்களில் புகார்கள் உருவாகி விடுகின்றன. 'இவர்கள் இதை வாங்கி வரவில்லை; அதை வாங்கி வரவில்லை' என்று குடும்பத்தார் மீது புகார்கள் செய்யப்படுகின்றன.

இந்த நன்றி கெட்டவர்களின் நிலையையும், ஸஹாபிகளின் நன்றி உணர்வின் நிலையையும் மிகவும் தாக்கம் நிறைந்த வடிவில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் எடுத்துரைத்துள்ளார்கள்.

அன்னார் (ரலி) கூறுகிறார்கள்:

'உங்களது உடம்பில் எப்போதாவது கிழிந்த ஆடை இருந்தால், பின்னர் நீங்கள் அழத் தொடங்கி விடுகிறீர்கள். 'எங்கள் அதிர்ஷ்டம் எவ்வளவு மோசமாகி விட்டது? உடுத்துவதற்கு கிழிந்த ஆடைதான் கிடைக்கிறது என்று நீங்கள் கூறிவிடுகின்றீர்கள். ஆனால், ஸஹாபாக்களுக்கோ கிழிந்த ஆடை கிடைத்தாலும் கூட, அல்லாஹ்வின் முன்னிலையில் அவர்களின் தலை குனிந்துவிடும். அவர்களின் நாவுகள் அவனது கருணையின் நினைவால் ஈரமாகி விடும். மேலும், 'நம் இறைவன் நமக்கு அளித்துள்ள இந்த ஆடை எவ்வளவு நன்றாக இருக்கிறது!' என்று அவர்கள் கூறுவர். அவர்களுக்கு நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு துண்டு காய்ந்த ரொட்டி கிடைத்தால் கூட, மகிழ்ச்சியால் அவர்களின் கண்களில் ஒளி பிறந்து விடும், அவர்கள் 'அல்ஹம்துலில்லாஹ் அல்லாஹ் நமக்குத் தனது அருட்கொடைகளை வழங்கியுள்ளான்' என்று அவர்கள் கூறுவர்.

அன்னார் (ரலி) ஜமாஅத் உறுப்பினர்களிடம் கூறுகின்றார்கள்: அவர்களுக்கு காய்ந்த ரொட்டித் துண்டுகள் அளித்த பலனை உங்களுக்கு புலாவ் எனும் உணவும், குருமாவும் வழங்காததற்கு இதுவே காரணமாகும். இன்று எவருக்கு புலாவ் கிடைக்கிறதோ, அவர் அதைச் சாப்பிடுகிறார்; ஆனால் அதோடு ஸர்தா (எனும் இனிப்புச் சோறு) இல்லையே! என்ற ஏக்கமும் அவருக்கு ஏற்படுகிறது. புலாவும் ஸர்தாவும் கிடைக்கப்பெற்றவர், ஸர்தாவோடு ஃபிர்னி (எனும் இனிப்பு வகை) இல்லையே என்று இரத்தக் கண்ணீர் வடிக்கிறார். எவருக்கு பருப்பு கிடைக்கிறதோ அவர் இறைச்சிக்காக அழுகிறார். எவருக்கு

இறைச்சி கிடைக்கிறதோ அவர் சோறுக்காகத் தவிக்கிறார். எவருக்கு நான்கு ரொட்டிகள் உண்பதற்கு கிடைக்கிறதோ அவரும் தவிக்கிறார் என்று விவரிக்கின்றார்கள்.

எப்படியிருப்பினும் அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

ஆனால், அந்த ஸஹாபாகளின் நிலை என்னவாக இருந்தது? அங்கு காய்ந்த ரொட்டித் துண்டுகள் கிடைத்தால் கூட, 'நாங்கள் இந்தத் துண்டுகளுக்கும் தகுதியானவர்கள் அல்ல; இது அல்லாஹ் தஆலாவின் அருளாகும்; அவன் இந்த ரொட்டித் துண்டை எங்களுக்கு அருளினான்' என்று அந்த ஸஹாபிகள் கூறினர். இதன் விளைவு என்னவாக அமைந்தது என்றால், அந்த காய்ந்த ரொட்டித் துண்டு அவர்களின் உடலில் ஒட்டிக் கொண்டது. அது அவர்களிடம் உயர்ந்த மனநிலையை உண்டாக்கி வந்தது. மேலான தைரியம் உருவாகி வந்தது. அவர்களின் நன்றியுணர்வை மேலும் அதிகரித்துக் கொண்டு சென்றது.

அரேபியர்களின் தலைமைத்துவப் பதவி முடிவுக்கு வந்த நாளான மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நாளன்று, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பத்தாயிரம் பரிசுத்தவான்களோடு மக்காவில் நுழைந்தார்கள். மேலும், அந்நாளில் இஸ்லாத்தின் பகைமையில் முழு வாழ்க்கையையும் கழித்த மக்காவின் பெரும் பெரும் தலைவர்கள் தலை குனிந்து நின்றனர். மேலும், அன்னாரின் சமூகத்தில் ஆஜராகினர். அன்னார் (ஸல்) அவர்களுக்கு முன்னால், 'நீங்கள் செல்லலாம்; நான் உங்களை எதுவும் கூறப்போவதில்லை; நீங்கள் அனைவரும் என் தரப்பிலிருந்து சுதந்திரமானவர்கள்' என்று அறிவித்தார்கள்.

எப்படியிருப்பினும், இந்த அறிவிப்பைச் செய்த பிறகு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உம்மு ஹானீ (ரலி) அவர்களின் வீட்டிற்குச் சென்றார்கள். மேலும், உம்மு ஹானீ (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை வழி சகோதரியாக இருந்தார்கள். ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டது போன்று, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உண்பதற்கு ஏதேனும் இருக்கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் (ரலி) 'உண்பதற்கு ஏதுமில்லை; என்று கூறினார்கள். தற்போது விவரிக்கப்பட்டிருப்பது போன்று, என்னிடம் பல நாட்களாக இருக்கும் காய்ந்த ஒரு ரொட்டியைத் தவிர வேறு எதுவும் இருந்திருந்தால் நானே தங்களுக்கு உணவளித்திருப்பேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

அதற்கு,அன்னார் (ஸல்) கூறினார்கள்: நல்லது; அதையே கொண்டு வாருங்கள்'. அன்னார் (ரலி) அந்த ரொட்டியைக் கொண்டு வந்தபோது,'இது மிகவும் நல்ல ரொட்டியாகும்; 'என் வீட்டில் உண்பதற்கு ஒன்றுமேயில்லை என்று நீங்கள் வீணாகக் கவலைப்படுகிறீர்களே! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிறகு அன்னார் (ரலி) தண்ணீர் எடுத்துக் கொண்டு வந்தார்கள். அன்னார் (ஸல்) ரொட்டியைத் தண்ணீரில் நனைத்தார்கள். அதற்குப் பிறகு 'குழம்பு இருக்கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு, அன்னார் (ரலி) கூறினார்கள்: 'குழம்பு எங்கிருந்து கொண்டு வருவேன்? என்னிடமோ ரொட்டி கூட இல்லையே! அப்படி இருந்திருந்தால் அதை நான் முன்பே கொண்டு வந்திருப்பேனே! சிறிது வினிகர் மட்டும் என்னிடம் உள்ளது'. அதற்கு, 'வினிகர் எவ்வளவு நல்ல குழம்பாகும்!' என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அன்னார் (ரலி) அந்த வினிகரைக் கொண்டு வந்தார்கள். இப்போது கூறப்பட்டது போன்று, அன்னார் (ஸல்) அதில் ரொட்டியை நனைத்து சாப்பிடத் தொடங்கினார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் வினிகரையும் இறைவனின் அருட்கொடையாகக் கருதினார்கள். மேலும், காய்ந்த ரொட்டியை அதைக் கொண்டு உண்டு, அவனது அருளுக்கு நன்றி செலுத்தினார்கள்.

ஆக,உள்ளபடியே செரிமானம் என்பது மனிதனின் உள்ளத்தில் உருவாகின்ற மகிழ்ச்சியிலிருந்தே உண்டாகிறது. மகிழ்ச்சியுடன் ஒரு சாதாரண பொருளை உண்டாலும் அது மனிதனிடம் மிக அதிக ஆற்றலை உருவாக்கி விடுகிறது; ஆனால் துக்கத்துடன் எவ்வளவு சிறந்த உணவைச் சாப்பிட்டாலும், அது மனிதனுக்குள் எந்தச் சக்தியையும் உருவாக்குவதில்லை.

அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

மக்கள் தங்களுக்கு அதிக பொருட்கள் கிடைத்திருக்க வேண்டும்; ஆனால், குறைவாகக் கிடைத்துள்ளது என்று கருதுகின்றனர். ஆனால், குறைவாக கிடைத்திருக்க வேண்டும்; ஆனால், அதிகமாகக் கிடைத்துள்ளது என்று ஒவ்வொரு விஷயத்திலும் அந்த ஸஹாபிகள் கருதி வந்தனர். அவர்களின் நன்றியுணர்வின் வழிமுறை என்னவாக இருந்ததென்றால், கொஞ்சம் கிடைத்தால் கூட 'இதுவே மிக அதிகமாகும்' என்று கூறுவர். அவர்களுக்கு ஒரு ரொட்டி வழங்கிய நன்மையை, பத்து ரொட்டிகள் கூட உங்களுக்குத் தராமல் இருப்பதற்கு இதுவே காரணமாகும்.

அடுத்து, அன்னார் (ரலி) கூறினார்கள்: இதற்கு காரணம் என்னவென்றால், 'உங்களில் சிலர் இன்னும் ஈமானின் இனிமையைச் சுவைக்கவில்லை. ஒரு மகத்தான ஆன்மிக வேலைக்காக இறைவன் உங்களைப் படைத்துள்ளான் என்ற இந்த உண்மைத்துவத்தை உங்கள் உள்ளங்கள் முற்றிலும் அறியாமல் உள்ளன. மேலும், எவரை இறைவன் ஆன்மிகப் புரட்சி மற்றும், மாற்றத்திற்காக படைத்துள்ளானோ, அவருக்கு முன்னால் உலகின் பெரும், பெரும் மன்னர்களும் ஒன்றுமற்றவர் ஆவர். ஆனால், நீங்கள் உங்கள் அந்தஸ்தை புரிந்து கொண்டு உங்கள் கடமைகளைச் சரியாக உணர்வதற்குப் பகரமாக, மிகவும் தாழ்ந்த மற்றும் அற்பமான சின்னச் சின்ன விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்தி விடுகின்றீர்கள், மேலும் 'எனக்கு இது கிடைக்கவில்லை, அது கிடைக்கவில்லை' என்று கூறுகின்றீர்கள்.

திருக்குர்ஆனிலிருந்து...

**நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)**

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

எந்த நோக்கத்திற்காக இறைவன் உங்களைப் படைத்துள்ளான் என்பதை நீங்கள் உணர்ந்து, உங்கள் தகுதியை அறிந்து கொள்ளாத வரை, உங்களால் என்ன பணி செய்ய முடியும்?

**இறைவன் உங்களை எந்த அந்தஸ்த்தில் நிறுத்தியுள்ளான் என்றால், உங்கள் மனம் எப்போதும் மகிழ்ச்சி அலையில் இருக்க வேண்டும்; உங்களிடம் எப்போதும் விழிப்புணர்வும், எச்சரிக்கையும் காணப்பட வேண்டும்; இந்த விஷயம் உங்களுக்குள் உருவாகிவிட்டால், பின்னர் உங்களிடம் எத்தகைய ஆற்றல் உருவாகி விடும் என்றால், அதன் மூலம் மிக மிகக் குறைவான உணவும் கூட உங்களை வேலை செய்வதற்குத் தகுதியானவராக ஆக்கி விடும்.'** (அமல் இன்றி வெற்றி பெற முடியாது, அன்வாருல் உலூம் தொகுதி 18, பக்கம் 475 முதல் 479 வரை) (அஸதுல் காபா தொகுதி 7, பக்கம் 393, தாருல் குதுபில் இல்மியா)

**எனவே, இது வழிமுறையாகும். இதனை பொதுவாக குறைந்த வசதி வாய்ப்பு படைத்த ஒவ்வோர் அஹ்மதியும், குறிப்பாக வாழ்வை அர்ப்பணித்தவர்களும், தங்களது நன்றியுணர்வின் தரத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இதற்கான தேவை மிகவும் அதிகமாக உள்ளது. அதே போன்று, ஒவ்வொருவரும் தத்தமது மனைவி மற்றும் பிள்ளைகளிடமும் இதைப் பற்றிய அதிகமான உணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில், எந்த நோக்கத்திற்காக வாழ்வை அர்ப்பணித்தவர்கள் தங்களை தாங்களே அர்ப்பணித்துள்ளார்களோ, அது மிகவும் மகத்தான நோக்கமாகும். மேலும், மகத்தான நோக்கத்தை அடைவதற்கு, மகத்தான நோக்கத்தை அடைந்தவர்களின் முன்மாதிரிகளை தங்களது கண்முன்னே நிறுத்த வேண்டும். அவற்றின்படி செயல்பட முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் அந்த நோக்கத்தையும் அடைய முடியும்.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது ஸஹாபிகள் செய்த சேவைக்காக நன்றியுணர்வுடன் எந்தளவுக்கு அவர்களுக்கு துஆக்களை வழங்கி வந்தார்கள்.

இது குறித்து அபூ கத்தாதா (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், அன்னாரிடம் உரையாடினார்கள். மேலும் கூறினார்கள்: 'நீங்கள் உங்களது முழு மாலையிலும், முழு இரவிலும் பயணிப்பீர்கள்; இன்ஷா அல்லாஹ் நாளை தண்ணீர் இருக்கும் இடத்தை அடைந்து விடுவீர்கள்'.

அவர்கள் ஒரு பயணத்தில் இருந்தார்கள். மக்கள் ஒரு பயணத்தில் எவ்வாறு சென்று கொண்டிருந்தனர் என்றால், யாரும் யாரைப் பற்றியும் கவனத்தில் கொள்ளவில்லை.

ஹஸ்ரத் அபூ கத்தாதா (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சென்று கொண்டே இருந்தார்கள்; எதுவரை என்றால், நடு இரவு கழிந்துவிட்டது; நான் அவர்களின்

பக்கவாட்டில் இருந்தேன். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குச் சிறிது தூக்கம் வந்தது. எனவே, அன்னார் (ஸல்) தமது வாகனத்தின் ஒரு பக்கமாகச் சாய்ந்தார்கள். நான் அன்னாரிடம் சென்றேன்; மேலும், நான் அன்னாரை எழுப்பாமல் தாங்கிப் பிடித்தேன்; எந்த அளவிற்கு என்றால், அன்னார் (ஸல்) தமது வாகனத்தில் சரியாக நிமிர்ந்து அமர்ந்து கொண்டார்கள்.

கூறுகின்றார்கள்: பிறகு, இதேபோன்று தொடர்ந்து சென்று கொண்டிருந்தோம்; எதுவரை என்றால், இரவின் பெரும் பகுதி கழிந்துவிட்டது. அப்போது, அன்னார் (ஸல்) சிற்றுறக்கத்தின் காரணமாக தமது வாகனத்தில் சாய்ந்து விட்டார்கள்.

அவர்கள் கூறுகின்றார்கள்:நான் அன்னாரிடம் சென்றேன்; மேலும், நான் அன்னாரை எழுப்பாமல் தாங்கிப் பிடித்தேன்; எந்த அளவிற்கு என்றால், அன்னார் (ஸல்) தமது வாகனத்தில் சரியாக நிமிர்ந்து அமர்ந்து கொண்டார்கள். கூறுகின்றார்கள்: பின்னர் இதே போன்று சென்று கொண்டிருந்தோம்; எந்த அளவிற்கு என்றால் இரவின் கடைசிப் பகுதி வந்து விட்டது. அப்போது, அன்னார் (ஸல்) முந்தைய இரண்டு முறையை விட அதிகம் சாய்ந்து விட்டார்கள். எந்த அளவிற்கு என்றால், அன்னார் (ஸல்) திரும்பி கீழே விழுந்து விடுவார்களோ என்ற நிலை ஏற்பட்டது. நான் அன்னாரிடம் சென்றேன். மேலும், அன்னாரைத் தாங்கிப் பிடித்தேன்.

ஆக, அன்னார் (ஸல்) தமது தலையை உயர்த்தி, 'யார் இது?' என்று கேட்டார்கள். நான் 'அபூ கத்தாதா' என்று கூறினேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:'நீ எப்போது இருந்து என்னுடன் இப்படி வந்து கொண்டிருக்கின்றீர்?'.அதற்கு, 'இரவிலிருந்து நான் தங்களுடன் வந்து கொண்டிருக்கிறேன்' என்று கூறினேன். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நீர் அல்லாஹ்வின் நபியைப் பாதுகாத்தது போல அவன் உம்மைப் பாதுகாப்பானாக!' என்று கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம், தொழுகைக்கான இடங்கள் பற்றிய அத்தியாயம்... ஹதீஸ் 1091 (311), தொகுதி 3, பக்கம் 165 - 166)

அன்னார் (ஸல்) உச்சபட்ச நன்றியுணர்வை வெளிப்படுத்தினார்கள்.

அன்னார் (ஸல்) தமது நன்றியுணர்வின் தரத்திற்கு எத்தகைய முன்மாதிரியாக நம் முன் வைத்துள்ளார்கள். ஓர் அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் அபூ இமாமா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

**அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'கண்ணியமும், வல்லமையும் மிக்க என்னுடைய இறைவன், மக்காவின் பள்ளத்தாக்கை தங்கமாக மாற்றிவிடுகின்ற திட்டத்தை எனக்கு முன்னால் வைத்தான். அப்போது, 'என் இறைவா! வேண்டாம்; மாறாக, நான் விரும்புவது என்னவென்றால், நான் ஒரு நாள் பசியோடும். ஒரு நாள் வயிறு நிறைந்தும் இருக்க வேண்டும். மேலும், நான் வயிறு நிறைந்து இருக்கும் போது உன்னைப் புகழ்ந்து, உனக்கு நன்றி செலுத்த வேண்டும்; நான் பசியோடு இருக்கும் போது உனது சமூகத்தில் பணிவோடு மன்றாடி உன்னிடம் துஆ செய்ய வேண்டும்' என்று நான் கூறினேன்.'**

(அக்லாகுன் நபி (ஸல்) வ ஆதாபுஹூ - இப்னு ஹய்யான் அல்-அஸ்பஹானி, பக்கம் 224, தாருல் குதுபில்-அரபியா 1986)

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் தண்ணீர் அருந்தும் போது பாத்திரத்திலிருந்து (வாயை) விலக்கி மூன்று மூச்சுகளில் குடிப்பார்கள். ஒரே மூச்சில் முழு கிளாஸையும் பருகி விட மாட்டார்கள்; மாறாக மூன்று மூச்சுகளில் தண்ணீர் அருந்துவார்கள். ஒவ்வொரு மூச்சின் போதும் அல்லாஹ்வைப் புகழ்வார்கள். கடைசி மூச்சுக்குப் பிறகு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவார்கள்.'

(நூல்: அக்லாகுன் நபி (ஸல்) வ ஆதாபுஹூ - இப்னு ஹய்யான் அல்-அஸ்பஹானி, பக்கம் 191, தாருல் குதுபில்-அரபியா 1986)

அன்னார் (ஸல்) கூறியது போன்று: 'ஒரு மடக்கு தண்ணீர் குடித்தாலும் நன்றி செலுத்துங்கள். அவனைப் புகழுங்கள்.' - இதுதான் தண்ணீர் அருந்தும் முறையாகும். ஒரே மூச்சில் குடிப்பதற்குப் பதிலாக மெல்ல மெல்ல, இடைவெளி விட்டுப் பருக வேண்டும் என்பது நன்றியுணர்வுடன் சேர்த்து, உடல் ஆரோக்கியத்திற்கும் மிக அவசியமானதாகும்.

புஹாரியில் ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்களின் ஒரு நீண்ட அறிவிப்பு உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை. நான் எனது மனதிற்கு தைரியம் அளிப்பதற்காக என் வயிற்றைத் தரையில் அழுத்திப் படுத்துக் கொண்டிருப்பேன். சில நேரங்களில் என் பசியின் கொடுமையால் வயிற்றில் கல்லைக் கட்டிக் கொள்வேன். இது ஒரு நாள் விஷயமல்ல.பல நாட்கள் நிகழ்ந்த விஷயமாகும்.

கூறுகின்றார்கள்: ஒருநாள் நான் மக்கள் செல்லும் பாதையில் அமர்ந்து விட்டேன். மிக மோசமான நிலைமை இருந்தது. அவ்வழியாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கடந்து சென்றார்கள். நான் அன்னாரிடம், அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனில் ஏழைகளைக் கருத்தில் கொள்வது பற்றிய, யாசிக்காதவர்களைப் பற்றிய, பசியோடு இருப்பவர்களைப் பற்றிய ஒரு வசனத்தைக் குறித்து கேட்டேன். அன்னார் (ரலி) எனக்கு அதன் பொருளை புரிய வைத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கடந்து சென்றார்கள். அன்னாரும் எனக்கு அதே போன்று பொருளைக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.'

அதன் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னைக் கடந்து சென்றார்கள். மேலும் அன்னார் (ஸல்) என்னை பார்த்தபோது அன்னார் (ஸல்) புன்னகைத்தார்கள். என் மனதின் நிலையையும், என் முகத்தில் இருந்த நிலையையும் கண்டு அன்னார் (ஸல்) புரிந்து கொண்டார்கள். 'அபூ ஹிர்! அபா ஹிர் (அதாவது அபூ ஹுரைரா)!' என்று அழைத்தார்கள். நான், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதோ நான் இருக்கிறேன்' என்றேன். 'என் பின்னால் வாருங்கள்!' என்று கூறிவிட்டு அன்னார் (ஸல்) வீட்டுக்குச் சென்றார்கள். நான் அன்னாருக்குப் பின்னால் சென்றேன். அன்னார் (ஸல்) வீட்டிற்குள் சென்றார்கள். மேலும், எனக்கும் உள்ளே வர அனுமதி வழங்கினார்கள். அன்னாரின் அறையினுள், ஒரு பாத்திரத்தில் பால் இருந்தது. ' எங்கிருந்து வந்தது?' என்று அன்னார் (ஸல்) வீட்டாரிடம் கேட்டார்கள். ஒருவர் சார்பாக அன்பளிப்பாக வந்துள்ளது என்று அவர்கள் கூறினர்.

எவ்வாறிருப்பினும், 'அபூ ஹிர்! அபாஹிர்! 'அஹ்லுஸ் ஸுஃப்பா' (எனும் திண்ணைத் தோழர்கள்) இடம் சென்று, அவர்களை என்னிடம் அழைத்து வாருங்கள்! என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அவர்கள் எத்தகைய மக்களாக இருந்தனர் என்றால், அவர்கள் பெரும்பாலும் பசியுடனேயே இருந்து வந்தனர். மேலும், எப்போதும் அவர்கள் வெளியில் அமர்ந்து வந்தனர். மக்கள் தங்களிடமிருந்து அவர்களுக்காக உணவு போன்றவற்றை எடுத்துக் கொண்டு சென்று உண்ணக் கொடுத்து வந்தனர். எவ்வாறிருப்பினும் அன்னார் (ஸல்) அவர்களை அழைத்து வரும்படி கூறினார்கள்.

கூறுகின்றார்கள்: அவர்களை இப்படி அழைத்தது எனக்கு சற்று வருத்தமளித்தது. நான் (எனது மனதில்) கூறினேன்: 'இந்தச் சிறிய பாத்திரப் பால் அஹ்லுஸ் ஸுஃப்பாவிற்கு எப்படி போதுமானதாக இருக்கும்? இந்தப் பாலிலிருந்து சிறிதளவாவது நான் குடித்தால் தானே எனக்குச் சற்று தெம்பு கிடைக்கும்! அவர்கள் வந்து, அவர்களுக்குக் கொடுங்கள் என்று அன்னார் (ஸல்) எனக்குக் கட்டளையிட்டால், நான் அதைக் கொடுத்தே தீர வேண்டும். பின்னர் அந்த பாலிலிருந்து எனக்கு எதுவும் வந்தடையும் என்ற நம்பிக்கை இல்லை '. இருப்பினும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைக்குக் கீழ்ப்படிவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை.

எனவே நான் அவர்களிடம் சென்று அவர்களை அழைத்தேன். அந்தத் திண்ணைத் தோழர்கள் வந்தார்கள். மேலும் தங்களுக்குரிய இடத்தில் அமர்ந்து கொண்டனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'அபூ ஹிர்! அபூஹுரைராவே! என்று கூறினார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இதோ நான் உள்ளேன் என்று கூறினேன். அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்: இந்தப் பாத்திரத்தை எடுத்து அவர்களிடம் கொடு'.

கூறுகின்றார்கள்: நான் அந்தப் பாத்திரத்தை ஒருவரிடம் கொடுத்தேன். அவர் வயிறாரக் குடித்தார். பிறகு இரண்டாம் நபர், மூன்றாம் நபர் என அனைவரும் பருகிக் கொண்டு சென்றனர். எந்தளவிற்கு என்றால், இறுதியில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் பாத்திரம் வந்தடைந்தது. அப்போது அங்கு அமர்ந்திருந்த அனைவரும் வயிறாரக் குடித்திருந்தனர். அவர்கள் நன்றாக பால் அருந்தியிருந்தனர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்தப் பாத்திரத்தை

*நபிமொழியிலிருந்து...*

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

வாங்கினார்கள். மேலும், தம் கையில் வைத்துக் கொண்டு, என்னைப் பார்த்து புன்னகைத்தார்கள். மேலும், 'அபூ ஹுரைராவே! என்றழைத்தார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் இதோ உள்ளேன் என்று கூறினேன். அப்போது, அன்னார் (ஸல்) கூறினார்கள்:

தற்போது நானும், நீயும் மட்டுமே எஞ்சியிருக்கிறோம்'. அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தாங்கள் கூறியது உண்மைதான்' என்று நான் கூறினேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'அமருங்கள்; மேலும் பருகுங்கள்! என்று கூறினார்கள். நான் அமர்ந்து விட்டேன். மேலும் பருகத் தொடங்கி விட்டேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'இன்னும் பருகுங்கள்'. நான் மீண்டும் பருகினேன். 'இன்னும் பருகுங்கள்' என்று அன்னார் (ஸல்) கூறிக் கொண்டே இருந்தார்கள்.

நான் எந்த அளவிற்கு பருகினேன் என்றால், இறுதியில் 'உண்மையுடன் தங்களை அனுப்பியவன் மீது ஆணையாக! இனி இதைப் பருகுவதற்கு என்னிடம் எந்த இடமில்லை; முற்றிலும் வயிறு நிறைந்துவிட்டது' என்று கூறினேன். அன்னார் (ஸல்) கூறினார்கள்: 'அப்படியானால் எனக்கு அதைக் காட்டுங்கள்'. எனவே நான் பாத்திரத்தை அன்னாரிடம் கொடுத்து விட்டேன். அன்னார் (ஸல்) முதலில் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினார்கள். உள்ளபடியே, அன்னாரும் பசியோடு இருந்தார்கள். அன்னார் (ஸல்) முதலில் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தினார்கள். மேலும், அல்லாஹ்வின் திரு நாமத்தைக் கூறி, மீதமிருந்த அந்தப் பாலைக் பருகி விட்டர்கள். (ஸஹீஹுல்-புஹாரி, கிதாபுர்-ரிகாக், ஹதீஸ் எண்: 6452, நஸாரத் இஷாஅத் பதிப்பகம், தொகுதி 15, பக்கம் 220 முதல் 223)

ஆக, இது அன்னாரது நன்றியுணர்வாக இருந்தது. மேலும் இந்த நன்றியுணர்வின் காரணமாக அல்லாஹ்வும் அதில் எத்தகைய பரக்கத்தை வழங்கினான் என்றால், ஸஹாபிகள் அனைவரும் அருந்தினார்கள். மேலும், அன்னாரும் அதைக் கொண்டு தமது பசியைப் போக்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எவரேனும் ஒருவருக்கு நன்மை செய்யப்பட்டால், அதற்கு அவர் கைம்மாறு செய்யட்டும்! எவரிடம் இதற்கு ஆற்றல் இல்லையோ, அவர் மக்கள் முன்னிலையில் அந்த நன்மையைப் பற்றிக் குறிப்பிடட்டும்! ஏனெனில், எவர் அதைக் குறிப்பிடுகிறாரோ அவர் நன்றி செலுத்துகிறார். மேலும், எவர் போலியாகத் தன்னைத் தானே மேன்மையானவராகக் கருதுகிறாரோ, உள்ளபடியே அவருக்கு அந்த மேன்மை கிடைப்பதில்லை. அவரோ பொய்யின் இரு ஆடைகளை அணிந்துள்ள அந்த நபரைப் போன்றவர் ஆவார். அதாவது உச்சி முதல் பாதம் வரை அவர் பொய்யராவார்.' (முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல், முஸ்னத் ஆயிஷா, தொகுதி 8, பக்கம் 142-143, ஹதீஸ்: 25100, ஆலமுல் கிதாப்)

அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாமா அஸ்வத் பின் வஹ்ப் பின் அப்தே மனாஃப் பின் ஸுஹ்ரா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராக அனுமதி கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்: 'என்னுடைய மாமனே! உள்ளே வாருங்கள்!' என்று கூறினார்கள். அவர் உள்ளே வந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவருக்கு அமர்வதற்காகத் தம்முடைய மேலாடையை விரித்தார்கள். மேலும் கூறினார்கள்: 'இதன் மீது அமருங்கள்! ஏனெனில், மாமா என்பவர் தந்தையின் இடத்தில் இருப்பவர் ஆவார்.'

மாமா அவர்களே! 'எவருக்கு ஒரு நன்மை செய்யப்படுகிறதோ, அவர் அதற்கு நன்றி செலுத்தவில்லை என்றாலும், குறைந்தபட்சம் அந்த நன்மையைப் பற்றி குறிப்பிட்டுக் கூறட்டும். ஏனெனில் அவர் அதைக் குறிப்பிடும்போது, அவர் நன்றி செலுத்தியவர் ஆகிவிடுகிறார்.' (அஸ் ஸீரத்துல்-ஹலபிய்யா, தொகுதி 2, பக்கம் 313, தாருல் குதுபில்-இல்மிய்யா, 2008)

நன்றியுணர்வின் இந்த அம்சத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த வாழ்க்கை வரலாற்றில் நாம் எவ்வாறு காண்கிறோம்! ஏராளமான நிகழ்வுகள் உள்ளன. தமக்கு நன்மை செய்தவர்களை அன்னார் (ஸல்) எப்போதும் நினைவுகூர்ந்து வந்தார்கள். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அன்னாரைப் பற்றிக் குறிப்பிட்டுக் கொண்டே இருந்தார்கள்.

உதாரணமாக, அன்னாரின் கண்ணியத்திற்குரிய துணைவியாரான ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் இருந்தார்கள். அன்னார் (ரலி) ஒவ்வோர் அடியிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருமைகளை உணர்ந்தவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழகிய முறையில் நடந்து கொண்டார்கள். அன்னார் (ரலி) மக்காவின் செல்வச் சீமாட்டியாக இருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாருக்குத் திருமணம் நடந்தபோது, 'தாங்கள் விரும்பியவாறு இதைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்' என்று அன்னார் (ரலி) தம்முடைய அனைத்துச் சொத்துக்களையும் பெருமானார் (ஸல்) அவர்களின் பாதங்களில் வைத்து விட்டார்கள்.

பின்னர், நபித்துவ வாதத்திற்குப் பிறகு, ஒவ்வொரு துன்பம் மற்றும் சிரமத்தின் போதும் முழுமையான அர்ப்பணிப்புடனும், நன்றியுணர்வுடனும் அன்னார் (ரலி) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோளோடு தோள் நின்று உறுதியாக இருந்தார்கள். நபித்துவத்தின் பத்தாம் ஆண்டில் அன்னார் (ஸல்) மரணிக்கும் வரை இது தொடர்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது இந்த நன்றியுணர்வு மிக்க மனைவி செய்த நன்மைகளைத் தமது வாழ்நாளின் கடைசி மூச்சு வரை நினைவில் வைத்திருந்தார்கள். மேலும் அன்னாரின் நன்மைகளை எப்போதும் நினைவுகூர்ந்து கொண்டே இருந்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்னாரைப் பற்றி எவ்வளவு அதிகமாகப் பேசுவார்கள் என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஏனைய பரிசுத்தமான மனைவிமார்களுக்கு பொறாமை ஏற்படும் அளவுக்கு இருந்தது.

எனவே ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களைப் பற்றி குறிப்பிடும்போது, அன்னாரைப் புகழ்ந்து மிகவும் சிறப்பாகப் பேசுவார்கள். ஒரு நாள் எனக்கு தன்மான உணர்வு மிகைத்து விட்டது. நான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், 'தாங்கள் ஏன் அந்த மூதாட்டியைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றீர்கள்? கண்ணியமும், கம்பீரமும் மிக்க அல்லாஹ்வோ அவரை விடச் சிறந்த மனைவிமார்களை தங்களுக்கு வழங்கியுள்ளானே!' என்று கூறினேன்.

அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'அல்லாஹ் எனக்கு அவரை விடச் சிறந்த எந்த மனைவியையும் தரவில்லை. ஏனெனில், மற்றவர்கள் என்னை நிராகரித்தபோது, கதீஜா என்னை ஏற்றுக் கொண்டார். மேலும், மக்கள் என்னை நிராகரித்தபோது, அவர் என்னை உண்மைப்படுத்தினார். மக்கள் என்னை செல்வத்திலிருந்து விலக்கியபோது, அவர் தனது செல்வத்தின் மூலம் எனக்கு உதவி செய்தார். மேலும், மற்ற மனைவிமார்களிடமிருந்து எனக்குப் பிள்ளைகள் கொடுக்காத நிலையில், அல்லாஹ் அவர் மூலமாகவே எனக்குக் பிள்ளைகளை வழங்கினான்.' (முஸ்னத் இமாம் அஹ்மத் பின் ஹன்பல், முஸ்னத் ஆயிஷா தொகுதி 8, பக்கம் 204, ஹதீஸ் 25376, ஆலமுல்-கிதாப் 1998)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் அன்னாரின் தொண்டுகளை நினைவில் கொண்டார்கள். மேலும், எப்போதும் நன்றியுணர்வை வெளிப்படுத்தியும் வந்தார்கள்.

அவ்வாறே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமக்கு உதவிய தமது நண்பர்களுக்கும், மிகுந்த நன்றியுணர்வை வெளிப்படுத்தி வந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ பக்ர் (ரலி) ஆகியோருக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு, அது பற்றிய செய்தி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு எட்டியது. அப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) செய்த பெரும், பெரும் நன்மைகளை மற்றவர்களுக்கு நினைவூட்டினார்கள். மேலும், அன்னாருக்குத் துன்பம் கொடுக்காமல் இருக்கும்படி ஸஹாபிகளுக்கு அறிவுறுத்தினார்கள். இருவரும் விவகாரத்தை எடுத்துக் கொண்டு இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தனர். இருவரும் தவறை உணர்ந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும், 'நான் தான் உமரிடம் வரம்பு மீறி நடந்து கொண்டேன்; என்னை மன்னித்து விடுங்கள்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும், 'நான் தான் வரம்பு மீறி நடந்து கொண்டேன், என்னை மன்னித்து விடுங்கள்' என்று கூறினார்கள்.

எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கூற்றுகளை அதிகம் உற்று நோக்கவில்லை. இன்னும் கூறப்போனால்,



அன்னார் (ரலி) ஏன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் தர்க்கம் செய்தார்கள்? என்று அன்னார் (ரலி) மீது தமது அதிருப்தியை வெளிப்படுத்தினார்கள்.

பின்னர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'அபூபக்ரே! அல்லாஹ் உமது தவறுகளை மறைத்து, மன்னிப்பானாக!' என்று இருமுறை கூறினார்கள். பிறகு, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் வெட்கமடைந்தார்கள். மேலும், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வீட்டிற்கு சென்றார்கள். இவர்கள் இருவரும் அமர்ந்திருந்தபோது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'மக்களே! அல்லாஹ் என்னை உங்களிடம் அனுப்பினான்; நீர் பொய்யர் ஆவீர்! என்று நீங்கள் என்னை கூறினீர்கள், ஆனால், 'உண்மையாளர்!' என்று அபூபக்ர் கூறினார். மேலும் அவர் தனது உயிர் மற்றும் செல்வத்தைக் கொண்டு என் மீது அனுதாபம் காட்டினார். எனவே, நீங்கள் எனக்காக என் தோழரை விட்டுவிடுவீர்களா? மாட்டீர்களா?'

அன்னார் (ஸல்) (இப்படி) இருமுறை கூறினார்கள். இதற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஒருபோதும் எந்தத் துன்பமும் தரப்படவில்லை. எப்போதும் அவர்களின் நலனில் கவனம் செலுத்தப்பட்டது. (ஸஹீஹுல்-புகாரி, கிதாப் ஃபளாஇல் அஸ்ஹாபுன்-நபி (ஸல்), பாப்: நபி (ஸல்) அவர்களின் கூற்று... ஹதீஸ் 3661, தொகுதி 7, பக்கம் 153-154)

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) அறிவிக்கின்றார்கள். அன்னார் (ரலி) கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் மக்களிடம் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்கள். 'அல்லாஹ் தன் அடியார்களில் ஒருவருக்கு இதற்கான அதிகாரத்தை வழங்கினான்: அதாவது, அவர் உலகத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்! அல்லது அல்லாஹ்விடம் உள்ள அருட்கொடைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்! இந்த உரிமையை அல்லாஹ் அவருக்கு அளித்தான். அந்த அடியோரோ அல்லாஹ்விடம் உள்ள அந்த அருட்கொடையையே தேர்ந்தெடுத்தார்.'

ஹஸ்ரத் அபூ ஸயீத் குத்ரீ (ரலி) கூறுகின்றார்கள்: இதைக் கேட்ட ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கி விட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களோ அதிகாரம் வழங்கப்பட்ட ஏதோ ஓர் அடியாரைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள்; அவ்வாறிருக்க, அபூபக்ர் (ரலி) ஏன் அழுது கொண்டிருக்கிறார்? என்று நாங்கள் ஆச்சரியப்பட்டோம். ஆனால், உண்மையில் அந்த அடியார் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே ஆவார்கள்; அவர்களுக்குத்தான் அந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.

அறிவிப்பாளர் கூறுகிறார்: ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஸஹாபிகளாகிய எங்கள் அனைவரையும் விட இந்த விஷயத்தைப் பற்றி அதிகம் அறிந்தவராக இருந்தார்கள். அதனால்தான் அன்னார் (ரலி) அழுதார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

மக்களிலேயே தமது தோழமையின் அடிப்படையிலும், தம் செல்வத்தைச் செலவிட்டதன் அடிப்படையிலும் எனக்கு அதிக நன்மை செய்தவர் அபூபக்ர் ஆவார். என் இறைவனைத் தவிர வேறு யாரையேனும் நான் உயிர்த் தோழராக ஆக்குவதாயிருந்தால், நான் அபூபக்ரையே ஆக்கியிருப்பேன்.'(ஸஹீஹ் அல்புஹாரி, கிதாப் ஃபளாஇல் அஸ்ஹாபுன்-நபி (ஸல்), பாப்: நபி (ஸல்) அவர்களின் கூற்று... ஹதீஸ் 3654, தொகுதி 7, பக்கம் 149-150)

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுததற்குக் காரணம் என்னவாக இருந்தது என்றால், அல்லாஹ் தஆலா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தன் பக்கம் அழைக்க விரும்புகிறான் என்ற சிந்தனை அன்னாருக்கு அந்த விஷயத்தை கேட்ட உடன் ஏற்பட்டு விட்டது.

மக்காவில் முஸ்லிம்களுக்குப் பலவிதமான துன்பங்கள் இழைக்கப்பட்டபோது, அவர்கள் அல்லாஹ் தஆலாவின் கட்டளையின்படி, அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தனர். அந்த நேரத்தில் அபிஸீனிய மன்னர் அவர்களுக்குத் தனது நாட்டில் புகலிடம் அளித்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அபீஸீனிய மன்னரின் அந்த உதவியை எப்போதும் நினைவில் கொண்டிருந்தார்கள், மேலும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அன்னார் (ஸல்) அந்த நன்மைக்கான நன்றியுணர்வை தமது கூற்றுகளாலும், செயல்களாலும் வெளிப்படுத்தினார்கள்.

எனவே, அபீஸீனிய மன்னரின் தூதுக் குழு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அவைக்கு வந்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களை வரவேற்பதற்காக எழுந்து நின்றார்கள்.அப்போது, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்)அவர்களே! நாங்கள் போதுமானவர்கள் ஆவோம்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஸஹாபிகள் கூறினர். அதற்கு, 'அவர்கள் நம் தோழர்களை மிகவும் கண்ணியத்துடன் வைத்திருந்தார்கள். மேலும், மிகுந்த மரியாதை வழங்கினார்கள்; எனவே அவர்களின் இந்த நன்மைக்கு நானே நேரில் கைம்மாறு செய்ய விரும்புகிறேன்' என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஸ்ஸீரத்துன்-நபவிய்யா - இப்னு கஸீர், தொகுதி 2, பக்கம் 31, மக்தபஃ தாருல் மஃரிஃபா)

பின்னர், அன்னார் (ஸல்) அதே நன்றியுணர்வின் வெளிப்பாடாக அந்த மன்னரின் ஜனாஸா காயிப் தொழுகையையும் நடத்தினார்கள்.

ஆக, ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அபீஸீனிய மன்னரின் மறைவுச் செய்தி கிடைத்தபோது, அன்னார் (ஸல்) அவருடைய ஜனாஸா காயிப் தொழுகையை நிறைவேற்றினார்கள்.மேலும், ஸஹாபிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பின்னால் அணி வகுத்து நின்றார்கள். அன்னார் (ஸல்) அதில் நான்கு தக்பீர்கள் கூறினார்கள்.' (முஸ்னத் இமாம் அஹ்மது பின் ஹன்பல், முஸ்னத் அபூ ஹுரைரா, தொகுதி 3, பக்கம் 551, ஹதீஸ் 9644, ஆலமுல்-குதுப்)

அன்ஸார் ஸஹாபிகளின் செயலுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நன்றியுணர்வின் வெளிப்பாடு குறித்து ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது:

ஹஸ்ரத் 'நபி (ஸல்) அவர்களின் நபித்துவத்தின் 13-ஆம் ஆண்டில், ஹிஜ்ரத்திற்கு முன், மதீனாவைச் சேர்ந்த 70 நபர்கள் 'பைஅத்' செய்தனர். அதாவது, ஹுஸூர் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திற்கு முன்பு, நபித்துவத்தின் 13-ம் ஆண்டில் மதீனாவைச் சேரந்த 70 நபர்கள் ஹுஸூர் (ஸல்) அவர்களின் கரத்தில் பைஅத் செய்தனர்: மேலும், 'ஹுஸூர் (ஸல்) மதீனாவிற்கு வருகை தரும்போது, நாங்கள் எங்கள் உயிர்களைப் பாதுகாப்பது போல் தங்களையும் பாதுகாப்போம்' என்று வாக்குறுதி அளித்தனர்.

அந்தச் சந்தர்ப்பத்தில், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! மதீனாவின் யூதர்களுடன் எங்களுக்குப் பழமையான தொடர்புகள் உள்ளன; தங்களுக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கும்போது அந்தத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விடும்; அல்லாஹ் தங்களுக்கு வெற்றியையும், அதிகாரத்தையும் தரும்போது, தாங்கள் எங்களை விட்டுவிட்டு மீண்டும் மக்காவிற்குத் திரும்பிச் சென்றுவிடக் கூடாது!' என்று ஓர் அன்ஸாரி தோழர் கூறினார்.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'இல்லை,இல்லை. அப்படி ஒருபோதும் நடக்காது! இனி உங்கள் இரத்தம் என் இரத்தமாக இருக்கும். உங்கள் நண்பர்கள் என் நண்பர்கள். மேலும், உங்கள் எதிரிகள் என் எதிரிகள்'.' (அஸ்ஸீரத்துன்-நபவிய்யா - இப்னு ஹிஷாம், பக்கம் 315, தாருல் குதுபில்-இல்மிய்யா 2001) (ஸுபுலுல்-ஹுதா வர்-ரஷாத், தொகுதி 3, பக்கம் 201, மக்தபஃ அத் தாருல்-குதுபில்-இல்மிய்யா பெய்ரூத்)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கழிப்பறைக்குச் சென்றார்கள். அப்போது, நான் அன்னார் (ஸல்) உளூ செய்வதற்காக தண்ணீரை எடுத்து வைத்தேன்.

'யார் இதை வைத்தார்?' என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கேட்டபோது, நான் என்று கூறினேன். அதைக் கேட்ட அன்னார் (ஸல்) அவர்கள், 'அல்லாஹும்ம ஃபக்கிஹ்ஹு ஃபித்தீன்' (இறைவா! இவருக்கு மார்க்கத்தின் தெளிந்த அறிவை வழங்குவாயாக!) என்று எனக்காகப் பிரார்த்தனை (துஆ) செய்தார்கள்.'(ஸஹீஹுல்-புஹாரி, மொழிபெயர்ப்பு நூல், ஹதீஸ் எண்: 143, தொகுதி 1, பக்கம்; 233, நஷ்ரோ இஷாஅத் வெளியீடு)

சாதாரண பணிக்கும் கூட அன்னார் (ஸல்) தமது நன்றியுணர்வை வெளிப்படுத்தி வந்தார்கள்.

அறிவிப்பில் வருகிறது: கைபர் போருக்குப் பிறகு, வழியிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், ஹஸ்ரத் ஸஃபிய்யா (ரலி) அவர்களுக்கும் இடையே திருமணம் நடைபெற்றது. திருமண இரவன்று, ஹஸ்ரத் அபூ அய்யூப் காலித் பின் ஸைத் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூடாரத்திற்கு வெளியே இரவு முழுவதும் காவல் காத்து நின்றார்கள். காலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விழித்தெழுந்து, அபூ அய்யூப் அவர்கள் வெளியே காவல் காப்பதைக் கண்டு, 'அபூ அய்யூபே! என்ன விஷயம்? எல்லாம்

நலம்தானே?' என்று கேட்டார்கள். அதற்கு, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இவர் தங்களுக்கு ஏதேனும் பாதிப்பை ஏற்படுத்தி விடுவாரோ என்று தங்கள் தொடர்பாக இந்தப் பெண்ணைக் குறித்து எனக்கு அச்சம் ஏற்பட்டது. ஏனெனில், கைபர் போரில் இவருடைய தந்தை, கணவர் மற்றும் அவரது சமூகத்தைச் சேர்ந்தவர்களை தாங்கள் கொலை செய்துள்ளீர்கள்; மேலும், இவர் இப்போதுதான் புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார். எனவே, இவரிடமிருந்து தங்களுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்துவிடுமோ என்று அச்சம் ஏற்பட்டது என அன்னார் (ரலி)கூறினார்கள்.

அறிவிப்பாளர் கூறுகிறார்:

அன்னாருடைய இந்த தூய பற்றைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அன்னாருக்காக இவ்வாறு துஆ செய்தார்கள்: அல்லாஹ்வே! அபூ அய்யூப் இரவு முழுவதும் என்னைப் பாதுகாத்தது போலவே, நீ அவரைப் பாதுகாப்பாயாக!' (அல்-ரவ்ஸுல்-உன்ஃப், தொகுதி 4, பக்கம் 85)

முத்இம் பின் அதீ என்பவர், குரைஷிகளின் கொடூரமான உடன்படிக்கைச் சுருளைக் கிழித்தெறிந்த நபராக இருந்தார்; மேலும் தாயிஃபில் இருந்து திரும்பிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைத் தனது அடைக்கலத்தில் எடுத்து மக்காவிற்குள் நுழையச் செய்தவராக இருந்தார்.

எனவே, பத்ர் போர்க் கைதிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கொண்டு வரப்பட்டபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முத்இமின் நன்மைகளை நினைவுகூர்ந்தார்கள். அறிவிப்பில் வருகிறது: முஹம்மத் பின் ஜுபைர் தன் தந்தை ஹஸ்ரத் ஜுபைர் பின் முத்இம் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர்க் கைதிகளைப் பற்றி கூறினார்கள்: ' முத்இம் பின் அதீ உயிருடன் இருந்து, இந்த அசுத்தமான மக்களுக்காக என்னிடம் பரிந்துரை செய்திருந்தால், நான் அவருக்காக இவர்களை விடுவித்திருப்பேன்'. (ஸஹீஹுல்-புஹாரி... ஹதீஸ் 3139, தொகுதி 5, பக்கம் 487-488)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்களும் இந்தச் சம்பவத்தை எழுதியுள்ளார்கள். இந்தச் சம்பவத்தை எழுதிய பிறகு இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

'முத்இம் ஓர் இணைவைப்பவராகவே இருந்தார்,அந்த நிலையிலேயே மரணித்தார்; இருப்பினும் அவரது இயல்பில் கண்ணியம் இருந்தது.எனவே குறைஷிகளின் எந்தக் கொடூரமான ஒப்பந்தத்தால் முஸ்லிம்கள் ஷ ் அப் அபீ தாலிபில் முற்றுகையிடப்பட்டிருந்தார்களோ, அந்த குரைஷிகளின் உடன்படிக்கைச் சுருளைக் கிழித்தெறிந்தவர் முத்இம் ஆக இருந்தார். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரில் இருந்து திரும்பியபோது, அந்த நேரத்திலும் முத்இம்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

என்பவர் அன்னாரைத் தனது பாதுகாப்பில் எடுத்துக் கொண்டு மக்காவிற்குள் நுழையச் செய்தார். இந்த உதவியின் நினைவால் ஈர்க்கப்பட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வார்த்தைகளைக் கூறினார்கள்.

உண்மையில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு தனித்துவமான சிறப்பு என்னவென்றால், எப்போதாவது ஒரு நபர் தம்முடன் சிறிதளவு நல்ல முறையில் நடந்து கொண்டால், அன்னார் (ஸல்) அந்த நன்மையை ஒருபோதும் மறக்க மாட்டார்கள். மேலும், அந்த நன்மைக்கு நடைமுறையில் நன்றி செலுத்தும் சந்தர்ப்பம் கிடைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதே எப்போதும் அன்னாரின் விருப்பமாக இருந்தது, மேலும், உலகவாதிகளைப் போன்று, ஒருமுறை ஒருவர் செய்த நன்மைக்கு பதிலாக நன்மையைச் செய்துவிட்டால் 'இப்போது உதவிக்குக் கைம்மாறு செய்யப்பட்டுவிட்டது' என்று கூறிவிடும் நிலை இருந்ததில்லை. இன்னும் கூறப்போனால், அன்னார் (ஸல்) வாழ்நாள் முழுதும் அந்த நன்றியைச் செலுத்த முயற்சி செய்து வருவார்கள் அல்லது அதைப் பற்றி நினைவுகூர்ந்து வருவார்கள். (ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) பக்கங்கள் 365-366)

அப்துல்லாஹ் பின் அபி ரபீஆ மக்ஸூமீ தனது தந்தையிடமிருந்தும், அவர் தனது பாட்டனாரிடமிருந்தும் அறிவிக்கின்றார்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுனைன் போருக்குச் சென்றபோது, அவரிடமிருந்து முப்பது அல்லது நாற்பதாயிரம் கடன் வாங்கப்பட்டது. ஹுனைனிலிருந்து திரும்பி வந்தபோது அதைத் திருப்பிக் கொடுத்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'அல்லாஹ் உமது குடும்பத்திலும், செல்வத்திலும் பரக்கத் செய்வானாக! என்று கூறினார்கள்.

செல்வம் மற்றும் கடனுக்குப் பகரமாக முழுமையாகத் திரும்பச் செலுத்துவதும் பாராட்டுதல் ஆகும். அதாவது கடன் கொடுத்தவருக்கு நன்றி செலுத்துவதும் அவசியமாகும். (ஸுனன் இப்னு மாஜா, கிதாபுஸ்-ஸதகாத், பாப் ஹுஸ்னுல் கதா, ஹதீஸ் 2424)

ஹஸ்ரத் அம்ரு பின் அக்தப் (ரலி) அறிவிக்கின்றார்கள்: ஒருமுறை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்டார்கள். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டு வந்தேன். அதில் ஒரு முடி இருந்தது. நான் அந்த முடியை வெளியே எடுத்தேன் - அது ஒரு சிறிய விஷயமாகும். நான் அந்தப் பாத்திரத்தை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் கொடுத்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அல்லாஹும்ம ஜம்மில்ஹு என்று கூறினார்கள்.

பொருள்:அல்லாஹ்வே! இவரை அழகாக்கி விடுவாயாக!

அன்னார் (ஸல்) நன்றி செலுத்தாமல் விட்டுவிட்ட ஒரு சாதாரண சந்தர்ப்பம் கூட இருக்கவில்லை.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த துஆ அன்னார் (ரலி) மீது ஏற்படுத்திய தாக்கத்தை நான் பின்னர் கண்டேன்; அவர் தொண்ணூற்று மூன்று ஆண்டுகள் வரை ஆயுளைப் பெற்றார், அவருடைய தலையிலும், தாடியிலும் ஒரு நரைமுடி கூட இருக்கவில்லை.

(முஸ்னத் அஹ்மது பின் ஹன்பல், முஸ்னத் அம்ர் பின் அக்தப் அபூ ஸைத், பாகம் 7, பக்கம் 600, ஹதீஸ் 23271, ஆலமுல்-கிதாப் 1998)

இதேபோல் கத்தாதாவிலிருந்தும் ஓர் அறிவிப்பு உள்ளது. அவர்கள் கூறினார்கள்:

நாங்கள் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களிடம் இருந்து கேட்டோம். அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உம்மு ஸுலைம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், 'அனஸ் உங்கள் சேவகர் ஆவார்' என்று கூறினார்கள். அன்னார் (ஸல்) அனஸ் (ரலி) அவர்களுக்காக இவ்வாறு துஆ செய்தார்கள்,

அல்லாஹ்வே! இவரது செல்வத்தையும் சந்ததியையும் பெருகச் செய்வாயாக! மேலும் நீ இவருக்கு எதையெல்லாம் வழங்கினாயோ, அதில் இவருக்கு பரக்கத் செய்வாயாக!'. (ஸஹீஹுல்-புஹாரி மொழிபெயர்ப்பு, கிதாபுத்-தஆவாத், ஹதீஸ் எண்: 6334, பாகம் 15, பக்கம் 59, நஷ்ரோ இஷாஅத் வெளியீடு)

இந்த துஆ நிறைவேறியதைப் பற்றிய குறிப்பு இவ்வாறு கிடைக்கின்றது. ஹஸ்ரத் அனஸ் (ரலி) கூறுகின்றார்கள்:

'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நிச்சயமாக எனது செல்வம் மிக அதிகமாக உள்ளது; மேலும் எனது பிள்ளைகள், பேரன் பேத்திகளின் எண்ணிக்கை இன்று ஏறக்குறைய நூறை எட்டியுள்ளது.'

(ஸஹீஹ் முஸ்லிம் மொழிபெயர்ப்பு, கிதாப் ஃபஸாயில் அஸ்ஸஹாபா, பாப் மின் ஃபஸாயில் அனஸ் பின் மாலிக் (ரலி), பாகம் 13, பக்கம் 124, ஹதீஸ் 4517 (143), நூர் ஃபவுண்டேஷன்)

அடுத்து, அன்னார் (ஸல்) அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களிடம் இருந்து இந்த அறிவிப்பு உள்ளது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒரு நபருக்கு ஒரு நன்மை செய்யப்பட்டு, பின்னர் அவர் அதைக் நினைவுகூர்ந்து பேசினால், அவர் அதற்கு நன்றி செலுத்திவிட்டார்; மேலும், யார் அதை மறைத்தாரோ, நிச்சயமாக அவர் நன்றி கேடு காட்டினார்.' (ஸுனன் அபீ தாவூத், கிதாபுல்-அதப், பாப் ஃபீ ஷுக்ர் அல்-மஃரூஃப், ஹதீஸ் 4814)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அன்பளிப்புகளை ஏற்றுக் கொள்பவர்களாகவும், அதற்குப் பகரமாக (தாமும் அன்பளிப்பு) வழங்கியும் வந்தார்கள்.

(ஸுனன் அபீ தாவூத், கிதாப் அல்-புயூஃ, பாப் ஃபீ கபூல் அல்-ஹதியா, ஹதீஸ் 3536)

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'எவருக்கேனும் ஏதேனும் அன்பளிப்பு அளிக்கப்பட்டால், அவருக்கு ஆற்றல் இருக்குமென்றால், அவர் அந்த அன்பளிப்பிற்குப் பகரமாகக்

கொடுக்கட்டும்! அவருக்கு ஆற்றல் இல்லையெனில், அவர் (கொடுத்தவரைப்) புகழட்டும்! ஏனெனில், யார் புகழ்கிறாரோ அவர் நன்றி செலுத்திவிட்டார்; யார் அதை மறைக்கிறாரோ அவர் செய்நன்றி மறந்துவிட்டார்.' (ஸுனன் அபீ தாவூத், கிதாப் அல்-அதப், பாப் ஃபீ ஷுக்ர் அல்-மஃரூஃப், ஹதீஸ் 4813)

இவையே சமூகத்தில் அன்பையும் சகிப்புத்தன்மையையும் உருவாக்குவதற்கு மிகவும் அடிப்படை நற்பண்புகள் ஆகும்.

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது:

ஒரு கிராமவாசி ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு ஒரு பெண் ஒட்டகத்தை அன்பளிப்பாக வழங்கினார். அன்னார் (ஸல்) அவருக்கு அதற்குப் பகரமாக ஆறு ஒட்டகங்களை வழங்கினார்கள். (ஜாமிஉத் திர்மிதி, அப்வாபுல் மநாகிப், பாப் ஃபீ தகீஃப் வபனீ ஹனீஃபா, ஹதீஸ்: 3945)

ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிப்பு செய்யப்படுகிறது:

ஒரு நபர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். மேலும், அன்னாரிடம் கேட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவரிடமிருந்து அரை 'வஸ்க்' தானியம் கடன் வாங்கியிருந்தார்கள். அதாவது ஏறத்தாழ எண்பது கிலோ. பின்னர், கடன் கொடுத்த நபர் கடனைக் கேட்க வந்தார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்கு ஒரு 'வஸ்க்' வழங்கினார்கள். மேலும், கூறினார்கள்: 'இதில் பாதி அவருக்கு கொடுக்க வேண்டிய கடனை திருப்பிச் செலுத்துதல் ஆகும். மறுபாதி அவருக்கு நன்றி செலுத்தும் வகையில் வழங்கப்படும் அன்பளிப்பு ஆகும்'.

(அஷ்-ஷிஃபா பி தஃரீஃபி ஹுகூகில் முஸ்தஃபா, காஜி இயாஜ், பக்கம் 77-78, தாருல்-குதுபில்-இல்மியா, பெய்ரூத், 2002)

ஹஸ்ரத் அபூ ஹிந்த் (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது:

தமீம் இப்னு அவ்ஸ் அத்-தாரி (ரலி) சிரியாவிலிருந்து. மதீனாவிற்கு விளக்குகள், ஆலிவ் எண்ணெய் மற்றும் முறுக்கப்பட்ட கயிறுகள் ஆகியவற்றைக் கொண்டு வந்தார். அவர் மதீனாவை வந்தடைந்தபோது, தற்செயலாக அது வெள்ளிக்கிழமை இரவாக இருந்தது. அவர் தனது அடிமைக்குக் கட்டளையிட்டார். அந்த அடிமை கயிறுகளைத் தயார் செய்தார். மஸ்ஜிதுந் நபவியில் விளக்குகளைத் தொங்கவிட்டு, அவற்றில் எண்ணெய் ஊற்றி, திரிகளை இட்டு வைத்தார். சூரியன் மறைந்ததும் தமீம், தனது அடிமையிடம் விளக்குகளை ஏற்றிவைக்குமாறு கட்டளையிட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலுக்கு வருகை தந்தபோது, பள்ளிவாசல் விளக்குகளால் பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும், 'இதைச் செய்தது யார்?' என்று கேட்டார்கள்.

'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தமீம் அத்-தாரி செய்தார்' என்று மக்கள் கூறினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவருக்காக துஆ செய்தார்கள். மேலும் கூறினார்கள்: நீங்கள் இஸ்லாத்தை ஒளிரச் செய்துள்ளீர்கள். அல்லாஹ் உங்களை இம்மையிலும், மறுமையிலும் ஒளிரச் செய்வானாக!'. மேலும், 'எனக்கு ஒரு மகள் இருந்திருந்தால், நான் அவளை உமக்கு மணம் முடித்துத் தந்திருப்பேன்' என்றும் கூறினார்கள்.

அதாவது, அவர் பள்ளிவாசலை ஒளிரச் செய்த அவரது இந்த செயலை இந்த அளவுக்குப் பாராட்டினார்கள்.

(அல்-ஜாமிஉ லி-அஹ்காமில் குர்ஆன் (தஃப்சீர் குர்தபீ), தொகுதி 2, பக்கம் 2205-2206) (அத் தபகாத்துல்-குப்ரா, தொகுதி 7, பக்கம் 286, மக்தபஃ தாருல் குதுபில்-இல்மியா)

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் இருந்து அறிவிக்கப்படுகிறது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இரவில் தொழுகையில் மிகவும் நீண்ட நேரம் நின்று கொண்டிருப்பார்கள்; எந்தளவுக்கு என்றால், அவர்களின் பாதங்கள் வீங்கி விடும். இதைப் பார்த்த ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ் தங்களுடைய முன்னரும் பாவங்களிலிருந்து பாதுகாத்து விட்டான். பிந்தைய பாவங்களிலிருந்தும் பாதுகாத்து விட்டான்; அவ்வாறிருக்க தாங்கள் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். அதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நான் நன்றி செலுத்தும் அடியானாக இருப்பதை விரும்பக் கூடாதா?' என்று கூறினார்கள்.

இங்கே எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் திருமேனி சற்று பருமனாகியபோது, அல்லது கால்களில் வலி ஏற்படும்போது, அன்னார் (ஸல்) அமர்ந்து தொழுவார்கள். ஆனால் அமர்ந்து தொழும்போது, சூரா பாத்திஹா மற்றும் சூராக்களை அமர்ந்து கொண்டு ஓதி வந்தார்கள். ஆனால், ருகூ செய்ய விரும்பும்போது, பின்னர் எழுந்து நின்றுவிடுவார்கள்.

(ஸஹீஹுல்-புஹாரி, கிதாபுத்-தஃப்ஸீர்... பாப்: 'லியஃக்ஃபிர லக்கல்லாஹு மா தகத்தம மின் ஸன்பிக...' ஹதீஸ் 4837, தொகுதி 12, பக்கம் 83)

அதாஃ அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒருமுறை நானும் இப்னு உமர் மற்றும் உபைதுல்லாஹ் பின் உமர் ஆகியோரும் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் சமூகத்தில் ஆஜரானோம். 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் தாங்கள் கண்ட மிகவும் ஆச்சரியமான ஒரு விஷயத்தை எனக்குக் கூறுங்கள்' என்று ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் உம்முல் மூஃமினீன் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் கேட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் நினைவால் நிம்மதியிழந்து அழுதார்கள். மேலும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஒவ்வொரு செயலுமே விசித்திரம் நிறைந்ததாக இருந்தது' என்று கூறத் தொடங்கினார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஒருமுறை நிகழ்ந்த சம்பவமாகும். அதாவது, ஓர் இரவு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் என்னிடம் வருகை தந்து, என்னுடன் ஒரே படுக்கையில் படுத்துக் கொண்டார்கள். பிறகு, 'ஆயிஷாவே! இன்றைய இரவில் நான் என் இறைவனை வழிபட எனக்கு அனுமதி தருவாயா? என்று கேட்டார்கள். அதற்கு, 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்கோ தங்களின் விருப்பத்தை மதிப்பதும், தங்களின் நெருக்கமும் விருப்பத்திற்குரியதாகும்; என் புறமிருந்து தங்களுக்கு அனுமதி உள்ளது' என்று கூறினேன்.

உடனே அன்னார் (ஸல்) எழுந்தார்கள். மேலும், தண்ணீர் பையிலிருந்து உளூ செய்தார்கள். பிறகு, தொழுகைக்காக நின்று விட்டார்கள். தொழுகையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்தளவுக்கு அழுதார்கள் என்றால், அன்னாரின் கண்ணீர் அன்னாரின் மார்பில் விழத் தொடங்கியது. தொழுகைக்குப் பின் அன்னார் (ஸல்) வலது பக்கமாக எவ்வாறு சாய்ந்து அமர்ந்தார்கள் என்றால், அன்னாரின் வலது கரம் கன்னத்தின் கீழ் இருந்தது. பின்னர் அன்னார் (ஸல்) மீண்டும் அழத் தொடங்கி விட்டார்கள்; எந்த அளவிற்கு என்றால், அன்னாரின் கண்ணீர் தரையில் வடியத் துவங்கி விட்டது. பிறகு ஃபஜ்ர் தொழுகைக்காக பாங்கு சொல்ல ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் வந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இப்படி அழுது மன்றாடியதைக் கண்ட ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அல்லாஹ்தான் தங்களின் முன்-பின் பாவங்கள் அனைத்தையும் மன்னித்துவிட்டானே, பிறகு ஏன் இவ்வளவு அழுகிறீர்கள்?' என்று கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், 'நான் அல்லாஹ்வுக்கு அதிக நன்றி செலுத்தும் அடியானாக இருக்க வேண்டாமா? இன்றிரவு என் இறைவன் மீது இந்த வசனங்கள் இறங்கின என்று கூறினார்கள். மேலும், அதை ஓதிய பிறகும் சிந்திக்காதவருக்குக் கேடுதான்!' என்று கூறி சூரத்துல் ஆலி இம்ரானின் இந்த வசனங்களை ஓதிக் காட்டினார்கள். பொருள்:

நிச்சயமாக வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றின் படைப்பிலும், இரவும் பகலும் மாறி மாறி வருவதிலும் அறிவுடையோருக்குப் பல சான்றுகள் உள்ளன. அவர்கள் நின்று கொண்டும், அமர்ந்து கொண்டும், ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டும் அல்லாஹ்வை (எப்போதும்) நினைத்துக் கொண்டிருப்பார்கள்.

மேலும் வானங்கள் மற்றும் பூமி ஆகியவற்றின் படைப்பைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். எங்கள் இறைவா! இதனை நீ வீணாகப் படைக்கவில்லை; நீ தூய்மையானவன். எனவே நீ நெருப்பின் தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக! (என அவர்கள் கூறுவர்)

மேலும், அவர்கள் தன்னிச்சையாகக் கூறுகிறார்கள்: 'எங்கள் இறைவா! நீ இவற்றை வீணாகப் படைக்கவில்லை. நீ தூயவன். எனவே நெருப்பின் தண்டனையிலிருந்து எங்களைக் காப்பாற்றுவாயாக! (தஃப்ஸீர் ரூஹுல் பயான் - திருக்குர்ஆன் சூரா ஆலி இம்ரான் வசனம் 191-192, தொகுதி 2, பக்கம் 150, தாருல் குதுப் அல்-இல்மியா 2003) (அக்லாக்குன் நபீ வ ஆதாபுஹு - பக்கங்கள் 408-409, திக்ரு ஃபிஃலிஹி ஃபி லைலதிஹி... ஹதீஸ் எண்: 553 - கெய்ரோ பதிப்பு - 2016-ம் ஆண்டு)

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த வசனங்களை ஓதிய

பிறகு கூறினார்கள்: 'இந்த வசனங்களை ஓதியும், அவற்றில் சிந்தித்து ஆராயாத அந்த மனிதனுக்குக் கேடுதான் . (ரூஹுல் மஆனி - சூரா ஆலி இம்ரான் வசனம் 191-192, தொகுதி 4, பக்கங்கள் 499-500, தாரு இஹ்யா உத்-துராஸ் 1999)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த ஹதீஸை விளக்கிவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

'அரபியில் உள்ள சொற்கள் இவையாகும்: 'அஃபாலா அகூனு அப்தன் ஷுகூரா' - பொருள் நான் நன்றி செலுத்தும் அடியானாக ஆகக் கூடாதா என்ன?

நன்றியுணர்வைப் பற்றிய ஹதீஸில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

'ஆயிஷாவே! கருணை செய்வது மட்டுமே இறைவனின் பணியா என்ன? தனது பொறுப்புகளை நிறைவேற்றுவது அடியானின் பணி இல்லையா என்ன?

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்ற ஒரு மனிதர், தாம் செய்த அந்த அனைத்துத் தியாகங்களுக்கு மத்தியிலும், இறைவனோடு தாம் கொண்டிருந்த அளப்பரிய அன்பின் உணர்விற்கு மத்தியிலும், இரவுகளில் எழுந்து இறைவனின் சன்னிதானத்தில் எவ்வளவு நீண்ட நேரம் நிற்பதற்குத் தேவையுடையவராக இருந்தார்கள் என்றால், அன்னாரின் பாதங்கள் வீங்கிவிட்டன. பகலில் இறை வணக்கம் செய்வார்கள். தமது வாழ்வை அதிகபட்சமாக இறைவனை சந்திப்பதற்கு ஏற்றதாக ஆக்குவார்கள் எனில், வேறு எந்த மனிதரால் தம்மை இத்தகைய பொறுப்புகளிலிருந்து விலக்களிக்கப்பட்டவராகக் கருத முடியும்?"
(கியாமே பாகிஸ்தான் அவர் ஹமாரி ஸிம்மேதாரியான், அன்வாருல் உலூம் தொகுதி 19, பக்கங்கள் 439 - 440)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களும் இது குறித்துக் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் 'நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொழுகைகளில் எந்த அளவிற்கு அழுதார்கள்; மேலும், நீண்ட நேரம் நிற்பார்கள் என்றால், அன்னாரின் பாதங்களில் வீக்கம் ஏற்பட்டுவிடும். 'அல்லாஹ் தங்களின் அனைத்து பாவங்களையும் மன்னித்துவிட்டானே!; பிறகு, இந்தளவுக்குச் சிரமம் மற்றும் அழுகைக்கு என்ன காரணம்?' என்று ஸஹாபிகள் வினவினர். அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நான் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் அடியானாக இருக்கக் கூடாதா?' என்று கூறினார்கள்.'(மல்ஃபூஸாத் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத், தொகுதி 6, பக்கம் 231)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த நிலைமை நம் அனைவரிடமும் எதை எதிர்பார்க்கிறது என்றால், நாம் அல்லாஹ் தஆலாவின் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்துபவர்களாக மாறி, நமது நன்றியுணர்வை உச்சத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதாகும். நன்றியுணர்வு என்பது உட்கார்ந்து கொண்டிருப்பதன் பெயர் அல்ல; நன்றியுணர்வு என்பது செயலில் மேலும் முன்னேற்றத்தை விரும்புகிறது.

ஹுஸூர் (ஸல்) அவர்கள் இறையச்சத்தின் மிக உயர்ந்த தரத்தில் இருந்தார்கள். எனவே அன்னார் (ஸல்) நன்றியுள்ள அடியார் என்பதன் மிக உயர்ந்த தரத்தையும் அடைந்து விட்டார்கள்; அத்துடன் 'நீங்களும் நன்றியுள்ள அடியாராக ஆகுங்கள் என்று நமக்கும் அறிவுறுத்தினார்கள். அல்லாஹ் தஆலாவின் உண்மையான அடியாராக இருக்கும் உரிமையை நீங்கள் நிறைவேற்ற விரும்பினால், அல்லாஹ் தஆலா உங்கள் மீது தனது அருளை இறக்க இறக்க, அதே அளவிற்கு நீங்கள் உங்கள் இறை வணக்கத்தின் தரங்களை உயர்த்தி அவனுக்கு நன்றி செலுத்துங்கள்.' இறைவனின் அருள்களின் விளைவாக சோம்பல் இருக்கக் கூடாது, மாறாக இறை வணக்கத்திலும், நன்றியுணர்விலும் மேலும் மேலும் முன்னேற வேண்டும்.

எனவே, இந்த வழிமுறையை நாம் பின்பற்றும் வரை, தனிப்பட்ட முறையிலும், ஜமாஅத் அளவிலும் முன்னேற்றத்தின் படித்தரங்களைக் கடந்து கொண்டே இருப்போம், இன்ஷா அல்லாஹ்!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இதனை விவரித்தவாறு தொடர்ந்து ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: அது பாரசீக கூற்றாகும். அதன் பொருள்: அல்லாஹ்வின் அருளே என்னை அகந்தை கொண்டவனாக்கி விட்டது'. இவ்வாறு எவர் கூறுகிறாரோ அவர் முட்டாள் ஆவார்.

கவிஞர் அல்லாஹ்விடம் கூறுகிறார்: 'அல்லாஹ்வின் அருள் என்னை ஆணவம் மிக்கவனாக்கிவிட்டது'. அவன் அதற்கு நன்றியுள்ளவனாக மாறுவதற்குப் பதிலாக, அகந்தை கொண்டவனாக மாறிவிட்டான். ஏனெனில் அல்லாஹ்வின் அருள்கள் மனிதனை அகந்தை கொண்டவனாக ஆக்குவதில்லை.

'இறை அருள்கள் என்னை அகந்தை கொண்டவனாகவும், கீழ்ப்படியாதவனாகவும் ஆக்கிவிட்டன' என்று கூறுவது தவறானதாகும். மாறாக, அருள்கள் மனிதனை இன்னும் அதிக நன்றியுள்ளவனாகவும், கீழ்ப்படிதல் உள்ளவனாகவும் மாற்றுகின்றன.

எனவே, நீங்கள் முன்பை விட அதிக நன்றியுள்ளவர்களாக ஆகி விடுங்கள். ஏனெனில் அல்லாஹ் தஆலா கூறுகிறான்: 'லஇன் ஷகர்தும் லஅஸீதன்னகும்' (இப்ராஹீம்: 8) 'நீங்கள் நன்றி செலுத்தினால், உங்களுக்கு நான் இன்னும் அதிகப்படுத்துவேன்.'
(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 5, பக்கம் 361-362)

அல்லாஹ் தஆலா நம்மை உண்மையான நன்றியுள்ளவர்களாகவும், உண்மையான இறை வணக்கம் செய்பவர்களாகவும் ஆக்குவானாக! அவனுடைய அருள்களை எப்போதும் பெறுபவர்களாக நாம் திகழ்ந்து கொண்டே இருப்போமாக!
(தினசரி அல்-ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 28 ஆகஸ்ட் 2026, பக்கம் 2 மற்றும் 7)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

## 2-ம் பக்கத் தொடர்ச்சி (தலையங்கம்)......

உயிர்ப்பித்து வந்தார்கள் என்பது அல்ல.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் ( அலை) கூறுகின்றார்கள்:

'உண்மையில்... இறந்தவர்களை உயிர்ப்பிப்பதில் எமது நம்பிக்கை இதுவன்று.... அதேபோன்று, இறந்தவர்களை உயிர்ப்பித்தல் என்பதற்கு, உண்மையிலேயே மரணித்தவர் உயிர்ப்பிக்கப்பட்டார் என்பதன்று.... இஹ்யாயே மவ்த் என்பதன் பொருள் இதுவாகும்: (1) ஆன்மீக வாழ்வு அளிக்கப்படுவது. (2) (உயிருள்ள நிலையில்) மரணித்தவர்களுடன் கணக்கிடப்பட்டு விட்ட ஒருவரை துஆவின் மூலமாக குணப்படுத்துதல் ஆகும். 'இன்னார் செத்துப் பிழைத்துள்ளார் என்று பேச்சு வழக்கில் சொல்லப்படுவது போன்றதாகும். இறந்தவர்களை உயிர்ப்பித்தல் என்பதன் பொருளும் ஆபத்தான மரணிக்கும் நிலைக்கு சென்றவர்களை குணப்படுத்துதல் ஆகும்.பதர், 7 பிப்ரவரி 1907, பக்கம் 4)

உண்மையில், இந்த அடையாளங்கள் வெளிப்படும் இடங்களில் எல்லாம் எங்கு ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் உண்மைத்துவத்தை வெளிப்படுத்துகின்றனவோ. அங்கு, எந்த எஜமானரின் அடிமைத்துவத்தில் பெருமை கொள்கின்றார்களோ அந்த எஜமானரும் உண்மையின் ஒளியாகவும், அடையாளமாகவும் திகழ்ந்தார்கள் என்பதற்கு இவை சான்றளிக்கின்றன.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: கருணையுள்ள இறைவன், அந்த ஏற்றுக் கொள்ளப்பட்ட தூதரைப் பின்பற்றுதல் மற்றும் அன்பின் பரகத்தால், மேலும், இறைவனுடைய தூய வசனங்களைப் பின்பற்றியதன் தாக்கத்தினால், இந்த எளியவனைத் தனது சிறப்புரையாடல்களுக்குத் தேர்ந்தெடுத்துள்ளான். மேலும், மறைவான அறிவைக் கொண்டு என்னை கண்ணியப்படுத்தியுள்ளான். மேலும் ஏராளமான மறைவான ரகசியங்களைக் குறித்து தகவல் அளித்துள்ளான்; ஏராளமான உண்மைகளையும், ஞானங்களையும் இந்த எளியவனின் நெஞ்சில் நிறைத்து இருக்கின்றான். இந்த அனைத்து அன்பளிப்புகளும், அருள்களும், நன்மைகளும், இந்த அனைத்து ஆதரவுகளும், கவனங்களும், இந்த அனைத்து உதவிகளும், அருட்கொடைகளும், இந்த அனைத்து இறை உரையாடல்களும் ஹஸ்ரத் காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றுதல் மற்றும் அன்பினால் கிடைத்தவையாகும்.'

நண்பனின் அழகு என்னில் தாக்கம் செலுத்தியது, இல்லையெனில் நானோ வெறும் மண் ஆவேன்; மேலும், மண்ணாகவே இருந்திருப்பேன்.
(பராஹீனே அஹ்மதிய்யா, பக்கம் 623, அடிக்குறிப்பு 11)

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**1-ம் பக்கத் தொடர்ச்சி......**
**(ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பொன்மொழிகள்)**

அதனை மிகவும் இனிப்பான தண்ணீராக ஆக்கினார்கள்.

சில நேரங்களில் கடுமையான காயமடைந்தவர்கள் மீது தமது கரங்களை வைத்து அவர்களைக் குணப்படுத்தினார்கள். சில நேரங்களில் போரில் எவரின் கண்விழி ஒரு காயத்தால் பிதுங்கி வெளியே வந்து விட்டதோ அவர்களின் கண்களைத் தமது கரத்தின் பரக்கத்தால் மீண்டும் சரியாக்கி விட்டார்கள். இவ்வாறு இன்னும் பல பணிகளை தமது சொந்த அதிகாரப் பிரயோகத்தின் மூலம் செய்தார்கள். அவற்றுடன் மறைமுகமான ஓர் இறை ஆற்றல் கலந்திருந்தது.'

(ஆயினாயே கமாலாத்தே இஸ்லாம் - ரூஹானி கஸாயின் தொகுதி 5, பக்கம் 66-65)

* * * * * *

**12-ம் பக்கத் தொடர்ச்சி......**
**(ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013)**

அணிந்தால் என்ன யோசிப்பார்கள்? எனக்கு வெட்கமாக இருக்கும்; மற்ற பெண்கள் என்னைக் கேலி செய்வார்கள்; என்னைக் கண்டு சிரிப்பார்கள்' என்று நினைப்பீர்கள். அதனால் 7, 8, 9 வயதிலிருந்தே ஸ்கார்ஃப் அணிய பழகிக் கொள்ளுங்கள்; அப்போது மற்றவர்கள் முன்னால் இருக்கும் வெட்கம் நீங்கிவிடும். நீங்கள் பெரியவராகத் தெரியும்போது முழுமையாக ஸ்கார்ஃப் அணிந்து கொள்வது உங்களுக்கு மிகவும் போதுமானதாகும்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: 'எனக்கு இந்தத் தத்துவம் புரியவில்லை. எனவே, ஆண்களைப் பார்க்காதீர்கள். பெண்கள் சுயமே தங்களைத் தாங்களே நிர்வாணமாக்கிக் கொண்டு தங்களது கண்ணியத்தைக் குறைத்துக் கொள்கின்றனர். எனவே, தமது வெட்கத்தை நிலைநிறுத்துவதில் தான் ஓர் அஹ்மதிப் பெண், ஓர் அஹ்மதிச் சிறுமியின் கண்ணியம் உள்ளது. அசல் விஷயம் வெட்கம் ஆகும். இந்த வெட்கம்தான் மற்றவர்கள் உங்களை தவறான பார்வையுடன் பார்ப்பதிலிருந்து தடுக்கிறது.

கேள்வி: 'வயிற்றில் குழந்தை இருக்கும்போது, அல்லாஹ் அக்குழந்தையை நல்ல குழந்தையாக ஆக்கும் பொருட்டு ஒரு பெண் எந்தத் துஆவைச் செய்ய வேண்டும்.?' என்று ஒரு பெண் பிள்ளைக் கேட்டார்.

இக்கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: 'பிறக்கப்போகும் குழந்தைக்காக துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அக்குழந்தையை ஸாலீஹானதாகவும், நல்ல குழந்தையாகவும் ஆக்க வேண்டும் என்று துஆ செய்ய வேண்டும். மார்க்கத்தில் உறுதியாக நிலை நிற்கக் கூடியதாகவும், ஆரோக்கியமானதாகவும் ஆக்க வேண்டும்; எவ்விதத்திலும் என்னையும் வெட்கப்பட வைத்து விடக் கூடாது. மேலும், குடும்பத்தையும் வெட்கப்பட வைக்கக் கூடாது, ஜமாஅத்தையும் வெட்கப்பட வைக்கக் கூடியதாக இருக்கக் கூடாது. பிள்ளை மார்க்கத்தில் உறுதியானதாக இருக்க வேண்டும். 'என் வயிற்றில் இருப்பதை அல்லாஹ்வுக்காக நேர்ந்துள்ளேன் என்று ஹஸ்ரத் மர்யம் (அலை) அவர்களின் தாய் துஆ செய்தது போல துஆ செய்ய வேண்டும். அல்லாஹ்விற்கு அர்ப்பணிப்பது என்பதன் அர்த்தம் என்னவென்றால், 'அல்லாஹ்வே!, உனது கட்டளைப்படி நடக்கக் கூடியதாகவும், மேலும் அவற்றிற்கு ஏற்ப அமல் செய்யக் கூடிய பிள்ளையாகவும், நன்மைகளில் நிலை நிற்கக் கூடியப் பிள்ளையாகவும் இருக்க நான் உன்னிடம் துஆ செய்கிறேன்.மேலும் நான் அதனை உனது மார்க்கத்திற்காக உன்னிடம் ஒப்படைக்கிறேன்.'

எனவே இதற்காக முயற்சி செய்யுங்கள். உங்களின் பிள்ளைகள் மார்க்கத்தில் நிலைத்திருக்க வேண்டும். **(தொடரும்........)**

தமிழாக்கம்
முரப்பி
A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * * * * * * * *

திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன (13:29)

A. Khaleel Ahmad
( Melapalayam)



**ஸீரத் காத்தமுன் நபிய்யீன் (ஸல்) அவர்கள்**
**நூலாசிரியர்**
**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் எம். ஏ (ரலி)**

**அரேபிய நாடும் அதன் குடிமக்களும் பழக்க வழக்கங்கள் மற்றும் சமுதாய குணநலன்களும்**
**(சென்ற இதழ்களின் தொடர்ச்சி.......)**

அரேபியர்களிடம் வள்ளல்தன்மை ஒரு மிக உயர்ந்த பண்பாகக் கருதப்பட்டு வந்தது. அண்டை வீட்டாரையும், விருந்தினரையும் பாதுகாப்பது அவர்களின் மதத்தின் ஒரு பகுதியாக இருந்தது. விருந்து உபசரிப்பு என்பது அரேபியர்களின் இயற்கையான குணமாக இருந்தது. இரவில் ஏதேனும் ஓர் உயர்ந்த இடத்தில் தீ மூட்டி வைப்பார்கள். அதைப் பார்த்து துயரத்திலிருக்கும் பயணி அங்கு வந்து சேர வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்து வந்தனர். விருந்தினருக்காகத் வீட்டில் இருக்கும் அனைத்தையும் செலவிட அவர்கள் தயங்கியதில்லை.இது தொடர்பாக அரேபியாவின் பிரபலமான கதாநாயகன் ஹாதிம் தாயி என்பவரின் கொடைத்தன்மை மற்றும் விருந்தோம்பல் பற்றிய கதைகள் மிகவும் பிரபலமானவையாகும்.

தமது கோத்திரத்திற்கு ஆதரவாக இருப்பது ஒவ்வொரு அரேபியருக்கும் முற்றிலும் கடமையாக இருந்தது. ஒரு கவிஞர் பெருமிதத்தோடு இவ்வாறு கூறுகிறார்: 'நானோ கஸ்யியா கோத்திரத்தைச் சேர்ந்தவன் ஆவேன்; அவர்கள் தவறு செய்தால் நானும் தவறு செய்வேன்; அவர்கள் சரியான வழியில் சென்றால் நானும் சரியான வழியில் செல்வேன்.'

அரேபியர்களிடத்தில் தங்களது வம்சாவளியைப் பற்றிப் பெருமை கொள்ளும் பொதுவான வழக்கம் இருந்தது; மேலும் தங்கள் மூதாதையர்களின் சாதனைகளைப் பெருமையுடன் குறிப்பிடுவது அவர்களின் சிறப்பு அம்சமாக இருந்தது. இந்த அகந்தையின் விளைவாக, அரேபிய மக்கள் அடிமைகளையும், ஊழியர்களையும் மிகவும் ஏளனமாகப் பார்த்து வந்தனர். எதிரிகளுடனான நடத்தையில் அரேபியர்கள் பொதுவாகக் கொடூரமானவர்களாகவும், இரக்கமற்றவர்களாகவும் இருந்தனர். ஸார் எனும் பழிவாங்கும் ரத்த வெறி உணர்வு பற்றிய கொள்கை ஏற்கனவே விவரிக்கப்பட்டு விட்டது. இது ஒருவகையில் அரேபியர்களின் மதத்தின் ஒரு மாபெரும் அங்கமாக இருந்தது. ஸார் எனும் கொள்கைக்கு எதிரில் இறை நியதியை கூட பொருட்படுத்தாமல் இருந்தனர். ஒரு கவிஞர் கூறுகிறார்: 'நான் என் மீதிருக்கும் அவமானத்தையும், பழிச்சொல்லையும் வாளால் கழுவித் தீர்ப்பேன்; பின்னர் அல்லாஹ்வின் விதி என் மீது எதனைக் கொண்டுவந்தாலும் சரி, அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை.'

அரேபியர்கள் மிகவும் புத்திசாலிகளாகவும், கூர்மையான நினைவாற்றல் கொண்டவர்களாகவும் இருந்தனர். எனவே பண்டைய காலத்திலிருந்தே, தங்களது அனைத்து சமுதாய மற்றும் குடும்ப பாரம்பரியங்களையும் நினைவில் வைத்து, பல்வேறு தருணங்களில் அவற்றை எடுத்துரைப்பது அவர்களின் வழக்கமாக இருந்தது. போரில் இரண்டு துணிச்சலான வீரர்கள் சண்டையிட முன்வரும்போது, முதலில் அவர்கள் ஒருவருக்கொருவர் வம்சாவளியை விசாரித்துக் கொள்வர்; யாரேனும் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அவரைத் தம்முடன் போரிட அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்.

அரேபியர்களிடம் வருடம் மற்றும் மாதம் சந்திரனின் சுழற்சியைக் கொண்டு கணக்கிடப்பட்டு வந்தன. பன்னிரண்டு மாதங்களில் முதல் மாதம், ஏழாவது மாதம் மற்றும் கடைசி இரண்டு மாதங்கள் கண்ணியத்திற்குரிய மாதங்களாகக் கருதப்பட்டன. அவற்றில் எல்லாவிதமான சண்டையும், போரும், கொலையும் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் சில சமயங்களில் தங்களுடைய வசதிக்காக அரேபியர்கள் அம்மாதங்களை முன்னும், பின்னும் மாற்றிக் கொண்டு வந்தார்கள். இதன் மூலம் தேவை ஏற்பட்டால், அந்த மாதங்களிலும் பாவத்திற்குப் பயப்படாமல் போர் செய்ய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்து வந்தனர். இந்த வழக்கத்தை 'நஸீ' என்று அழைத்து வந்தனர்.

**(தொடரும்...)** (ஸீரத் காத்தமுன் நபிய்யீன், பக்கம் 55 முதல் 59, காதியான் பதிப்பு 2006)

* * * * * * * * * * *

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த விஷயம் சரியானதாகும். அதாவது எவர்கள் இறைவன் புறமிருந்து வருகின்றார்களோ தொடக்கத்தில் உலக மக்கள் அவர்களுக்கு எதிரிகளாக ஆகிவிடுகின்றனர். மேலும் அவர்களுக்கு பலவகையான துன்பங்களை கொடுக்கின்றனர். மேலும் அவர்களின் வழிகளில் தடைகளை தடைகளை ஏற்படுத்துகின்றனர். துன்பங்களை சந்திக்காத, மேலும் சதிகாரன், ஏமாற்றுக்காரன் மற்றும் வியாபாரி போன்ற அவப்பெயர்களை சுமக்காத எந்தவொரு தூதரும், நபியும் வந்ததில்லை. ஆனால் கோடிக்கணக்கான மனிதர்கள் அவர் மீது எல்லா வகையான அம்புகளையும் வீச விரும்பியபோதும், கற்களை வீசியபோதும், ஏசி பேசியபோதும் அவர்கள் எவருடைய பேச்சையும் பொருட்படுத்தியதில்லை. எந்த விவகாரமும் அவருடைய வழியில் தடையாக ஆக முடியவில்லை.(மல்ஃபூஸாத், தொகுதி 4 பக்கம் 152, 1988 ஆம் ஆண்டு பதிப்பு)

* * * * * * * * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2026-2028 Vol. 11 THU 24 SEP 2026 Issue No. 39

**ACT. MANAGER**
_ATHAR AHMAD SHAMIM
Mobile : +91 9815639670
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்களின் ஆஸ்திரேலிய சுற்றுப் பயணம் - 2013

(அறிக்கை : அப்துல் மாஜித் ஸாஹிப் தாஹிர்)

### மெல்ஃபர்ன் ஆஸ்திரேலியாவில் வாகிஃபாதே நவ் பெண் பிள்ளைகளுக்கான வகுப்பு

(இதழ் எண் 36 -ன் தொடர்ச்சி)

கேள்வி: ‘அல்லாஹ் தஆலா ஏன் நமக்கு தென்படுவதில்லை?‘ என்று ஒரு பெண் பிள்ளை கேட்டார்.

பதில்: அதற்கு, பதிலளித்த ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

‘அல்லாஹ்வோ ஓர் ஒளியாவான். அவன் எப்படி தென்பட முடியும்? ஆயினும், அல்லாஹ்வின் வல்லமைகளைப் பார்க்க முடியும். நீங்கள் துஆ செய்து, அந்த துஆ ஒப்புக் கொள்ளப்படுதலில், இறைவனே காட்சி அளிக்கிறான்.

15 நிமிடங்கள் உள்ளன; இந்த நேரத்தில் எனது பணி நடந்து விட வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என நான் அல்லாஹ்விடம் கூறினேன்; ஆக, அல்லாஹ் எனது விருப்பத்தை முழுமை செய்து விட்டான். இது அல்லாஹ்வின் கருணையாகும்‘ என்று தற்போது தான் உங்களுக்கு நான் கூறினேன்.

மேலும் ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ‘அல்லாஹ்வின் அனைத்துப் Creation இருக்கின்றன. Vegetation இருக்கின்றன. ஆஸ்திரேலியாவோ Flora and Fauna என்ற புகழ்பெற்ற இடமாக கூறப்படுகிறது. ஆக, இவை அனைத்தும் அல்லாஹ்வால் படைக்கப்பட்டுள்ளவையாகும். தாவரங்களில் இலைகள் இல்லையென்றால், அந்த தாவரம் நிலைக்காது என்று கூறுகின்றனர். மேலும் அதனுடன் இருக்கும் (பச்சையம் எனும் )Chlorophyll தாவரத்திற்கு வாழ்வளிக்கிறது; அவை தனது பங்கை ஆற்றுகின்றன என்று கூறுகின்றனர். ஆனால், நான் இங்கு சில தாவரங்களைப் பார்த்தேன்; அவற்றில் ஒரே ஒரு தண்டு மட்டுமே உள்ளது. இலைகள் செய்யும் வேலையை அந்தத் தண்டே செய்கிறது. அத்தண்டின் மேல் ஒரு மிகப் பெரிய, அழகான, வண்ணமயமான மலர் பூத்திருக்கிறது. ஆக, இதுவும் அல்லாஹ்வின் ஒரு வல்லமையே ஆகும். அல்லாஹ்வால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளையும் கூர்ந்து கவனித்தால், பின்னர் அதில் அல்லாஹ்வைக் காண முடியும்‘.

கேள்வி: ‘திருமணத்திற்குப் பிறகு எங்கள் மீது வீடு, குடும்பம் அல்லது குழந்தைகளுக்கான பொறுப்புகள் வந்துவிடுகின்றன. அந்நேரத்தில் நாங்கள் வக்ஃவே நவ் என்ற எங்களது பொறுப்பை சரியான முறையில் எப்படி நிறைவேற்ற முடியும்?‘ என்று ஒரு வக்ஃபே நவ் பெண் பிள்ளைக் கேட்டார்.

அதற்குப் பதிலளித்தவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ‘சரியான வழி என்னவென்றால், கடமையான ஐவேளை தொழுகையைத் தொழ வேண்டும். தஹஜ்ஜுத் தொழ முடிந்தால் தொழ வேண்டும். திருக்குர்ஆன் ஓத வேண்டும். அதன் மொழிபெயர்ப்பைப் படிக்க வேண்டும். லஜ்னா அமைப்பின் ஏதாவது பணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டால், அதை எந்த அளவுக்கு செய்ய முடியுமோ செய்யுங்கள். அடுத்து, அனைத்தையும் விடப் பெரிய பொறுப்பு என்னவென்றால், உங்களது குழந்தைகளுக்கு எத்தகைய தர்பிய்யத் வழங்க வேண்டும் என்றால், அவர்களுக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்பட்டு விட வேண்டும். ’நான் வக்ஃபே நவ் ஆக இருக்கிறேன்; எனது பணி என்னவென்றால், நானும் தர்பிய்யத் பெற்று, எனது குடும்பத்திற்கும் தர்பிய்யத் அளிப்பது ஆகும் என்பதை உங்களின் கணவரையும் Realise செய்ய வையுங்கள். எனவே, குழந்தைகளை வளர்ப்பதில் நீங்களும் எனக்கு உறுதுணையாக இருங்கள்’ என்று அவரிடம் கூற வேண்டும்‘.

ஏனெனில், கணவனானவர் மற்றும் தந்தையானவர் தமது பிள்ளைகளின் வளர்ப்பில் தமது பங்கினை ஆற்றவில்லை என்றால், பின்னர் பிள்ளைகளின் வளர்ப்பு சரியாக அமைவதில்லை. எனவே, மிகப்பெரிய பொறுப்பு என்பது குடும்பப் பொறுப்பாகும். உங்களுக்கு இதிலேயே மிகப்பெரிய நற்கூலி உள்ளது.

ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ஹதீஸில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு பெண்மணி வந்தார். அப்பெண்மணி கூறினார்: ’எங்களது கணவன்மார்கள் சம்பாதிக்கிறார்கள்; ஜிஹாதும் செய்கிறார்கள்; சந்தாக்களும் கொடுக்கிறார்கள்; மேலும், பெண்களாகிய எங்களால் வீடுகளுக்குள் இருந்து கொண்டு அந்தக் காரியங்களை செய்ய முடியாது. எனவே, இந்த ஜிஹாது மற்றும் சந்தா கொடுப்பதற்கான நற்கூலி எங்களுக்கும் கிடைக்குமா?’ என்று அவர் கேட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ’ஆம்! கிடைக்கும். ஏனெனில், நீங்கள் அவர்களின் வீட்டை நன்றாகப் பராமரிக்கிறீர்கள்; அவர்களின் பிள்ளைகளை வளர்க்கின்றீர்கள்; அவர்கள் இல்லாத நேரத்தில் அவர்களின் பிள்ளைகளைப் பாதுகாத்து பராமரிக்கின்றீர்கள். அடுத்து, அவர்கள் நல்ல சந்ததிகளாக உருவெடுக்கின்றனர். இதன் காரணமாக உங்களுக்கும் அதற்கான அதே அளவு நற்கூலிகள் கிடைக்கும். பின்னர் நீங்கள் இதனையும் பொறுத்துக் கொள்கின்றீர்கள். அதாவது, செல்லுங்கள்; சென்று மார்க்கத்திற்கு தொண்டாற்றுங்கள் என்று கூறி உங்களின் கணவர்மார்களை அனுப்பி வைக்கின்றீர்கள். கணவர் உலகத்திற்கும் சேவையாற்றுகிறார்; மார்க்கத்திற்கும் தொண்டாற்றுகிறார் என்றாலும், ஹதீஸில் இவ்வாறும் கூறப்பட்டுள்ளது: அதாவது, பெண் என்பவர் வீட்டின் கண்காணிப்பாளர் ஆவார். ஆகவே, வக்ஃபே நவ் ஆகிய உங்களின் தார்மீகப் பொறுப்பு என்னவென்றால், உங்களது புதிய தலைமுறையை அஹ்மதிய்யத்தில் உறுதியாக நிலைபெறச் செய்யுங்கள்; மேலும், அல்லாஹ்வுடன் அவர்களுக்குத் தொடர்பை ஏற்படுத்துங்கள்.

கேள்வி: ’நாங்கள் பள்ளிக்குச் செல்லும்போது எந்த வயதில் நாங்கள் தலையில் ஸ்கார்ஃப்( துப்பட்டா) அணிய வேண்டும்?’ என்று ஒரு பெண் பிள்ளை கேட்டார்.

பதில்: இக்கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்: ‘உங்களுக்கு ஐந்து வயதாக இருக்கும்போது, Frock (கவுன்) இல்லாமல் Legging அணியக் கூடாது. உங்களது கால்கள் மூடப்பட்டிருக்க வேண்டும்; அப்போதுதான் நமது ஆடை மெல்ல மெல்ல மூடப்பட வேண்டும் என்ற உணர்வு உங்களுக்கு ஏற்படும். ஸ்லீவ்லெஸ் (Sleeveless) கவுன்களை அணியக் கூடாது. பின்னர் உங்களுக்கு ஏழு, எட்டு வயதாகும் போது Legging அணிந்து பள்ளிக்குச் செல்லுங்கள். உங்களுக்கு பத்து வயதாகி விடும் போது பின்னர் சிறிது ஸ்கார்ஃப் அணியும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்; பின்னர் உங்களுக்கு 11 வயதாகும் போது முழுமையாக ஸ்கார்ஃப் அணிந்து கொள்ளுங்கள். இங்கும் குளிர்காலத்தில் மக்கள் ஸ்கார்ஃப் அணிந்து கொள்கின்றனர். குளிர்காலமாக இருக்கும்போது, தங்களது காதுகள் போன்வற்றை மூடும் வகையில் துணியால் சுற்றிக் கொள்கின்றனர்; அதுவும் ஒருவகை ஸ்கார்ஃப் தான்.

ஹுஸூர் அன்வர் அவர்கள் மேலும் கூறினார்கள்: ‘சில பெண்கள் 10 வயதிலேயே பெரியவர்களாகத் தெரிவார்கள்; சிலர் 10 வயதில் 12 வயதுப் பெண் போலத் தெரிவார்கள். உயரம் அதிகமாகிவிடும். எனவே, அப்பெண் பெரியவளாகத் தெரிந்தால், அவர் ஸ்கார்ஃப் அணியத் தொடங்க வேண்டும். சிறிய வயதிலேயே ஸ்கார்ஃப் அணியும் பழக்கம் வரவில்லையென்றால், பின்னர் வெட்கம் ஏற்படாது; வாழ்நாள் முழுதும் வெட்கப்படாமல் இருப்பீர்கள். ’நான் 12, 13, 14 வயதில் போய் ஸ்கார்ஃப்

இதன் தொடர்ச்சி 11-ம் பக்கம்....

National Watch Company
Sales & Service

B. Mohamed Adil
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
O.A.N. Doors & Steels
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, { opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad